வாராந்த சஞ்சிகை

# சுடர் ஒளி

செப்டெம்பர் 02 - 08, 2015

பக்கம் 24

விலை 30/-



# காலம் கடந்த ஞானம்







# அதிசயக் கண்?



பூமியில் திடீரெனத் தோன்றிய வெடிப்பால் பீறிட்டுத் வெளித்தள்ளிய களிமண் சமமாக வட்டமடித்து வெண்விழியாகப் பரவ, அதன் மையத்தில் ஆழ்துளை பகுதி கருவிழி போல காட்சி அளிக்க, அசல் மனித கண்ணைப் போலவே தோன்றுகிறது இந்த ஆச்சரியம்.

எரிமலை வெடிப்பு என்றால் நெருப்பு பாறை குழம்பை வெளித்தள்ளும். அது ஆபத்தானது. ஆனால், இங்கு ஏற்பட்டிருப்பது அப்படியல்ல.

பூமிக்குள் உருவான அழுத்தம் மற்றும் வெப்பம் காரணமாக, வாயுக்கள் மற்றும் திரவ களிமண் பீறிட்டு வெளியேறியுள்ளது. இது புதை சேற்று எரிமலை என அழைக்கப்படுகிறது.

இது வெடிப்பு ஏற்பட்ட பகுதியை தவிர சுற்றுப்புறத்தை அவ்வளவாகப் பாதிப்பதில்லை. நிலத்தில் இது போன்ற சீற்றங்கள் ஆங்காங்கே அவ்வப்போது நடப்பது இயல்பானதுதான்.

ஆனால், அந்த வெடிப்பு ஏற்பட்ட முடிவுநிலையில் ஒரு கண்ணைப் போல பூமியில் காட்சியளிப்பதுதான் விஷேசமே.

கிழக்கு ரஷ்யாத் தீவான சாக்ஹாலினில் தான் இந்த 'புகசேவ்ஸ்கி' என்ற புதை சேற்று எரிமலை ஏற்பட்டுள்ளது.


அதுவும் ஹெலிகொப்டரிலிருந்து பார்க்கும்போது இது பூமியின் கண்போலவே காட்சியளிக்கிறது என்று இதனை புகைப்படம் எடுத்தவர் கூறியுள்ளார்.

இதன் அருகிலேயே இன்னொரு இதைவிட பெரிய புதை சேற்று எரிமலை ஏற்பட்டுள்ளது. ஆனாலும் அது கண்போல அமையவில்லை. அதனால், அதுக்கு அவ்வளவு முக்கியத்துவம் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சாக்ஹாலின் கமெராமேன் மைகேல் மைகேலோவ் தான் இதை முதன் முதலாக படம்பிடித்து இணையத்தில் வெளியிட்டார்.

அவர் பல புதை சேற்று எரிமலை பார்த்திருந்தாலும் இதுபோல பார்த்ததில்லை. இது அரிதாக நிகழ்கிற ஒரு ஆச்சரியமான அற்புதமான இயற்கை வினை என்று கூறுகிறார்.

ஆன்மீக மயக்கமுடைய மனிதர்கள் உள்ள கிராமத்தில் இது நடந்திருந்தால் அதை தெய்வீகமாக்கி பக்தர்கள் குவிந்திருப்பார்கள். ஆச்சரியம் ஏற்பட்டதோடு, ஒரு ஆலயமும் ஏற்பட்டிருக்கலாம்!





# அதிசயத் திருமணம்!

அண்மையில் ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் மிகவும் சுவாரசியமாக உலகின் முதல் ரோபோக்களுக்கிடையேயான திருமணம் நடைபெற்றதுடன் கடந்த சில நாள்களாக இச்செய்தி இணைய ஊடகங்களில் ஆக்கிரமித்துள்ளது.

'மய்வா டெங்கி' என்ற நிறுவனம் தயாரித்த 'புரோயிஸ்' என அழைக்கப் படும் ஆண் ரோபோவும் 'யுகிரின்' என அழைக்கப்படும் பெண் ரோபோவும் திருமணம் செய்து கொண்ட இந்த நிகழ்ச்சியில் பங்கு பற்றிய பார்வையாளர்களில் பலரும் ரோபோக்களே ஆவர்!

மேலும் ரோபோக்கள் உட்பட பங்கு பற்றிய அனைத்து விருந்தினர்களுக்கும் முன்னதாக இதய வடிவில் இரு ரோபோக்களின் படங்களையும் இணைத்து திருமண அழைப்பிதழ் அனுப்பப்பட்டிருந்தது. சிவப்பு நிறத்தில் சற்றுப் பெரிதாக இயந்திர மனித உருவில் மாப்பிள்ளையும் மிக நேர்த்தியான திருமண அலங்காரத்துடன் பொம்மை வடிவில் இருந்த மணப்பெண்ணும் பாரம்பரிய முறைப்படி திருமணம் செய்து கொண்ட பின் முத்தமிட்டுக் கொண்ட காட்சியும் மிக விநோதமாக பார்வையாளர்களை வெகுவாக ஈர்த்தது. திருமணம் நிறைவுற்ற பின் ஜப்பான் முறைப்படி 'கேக்' வெட்டி ஆடல், பாடல் போன்ற இசை நிகழ்ச்சிகளும் அரங்கேறி விழாவின் சுவாரசியத்தை அதிகரித்தன.

# தலையாட்டிப் பொம்மைகளா?

- ஆதங்கன்

குழந்தைகளின் ஆசைகள் பெரியவை. பல சமயங்களில் தம் குழந்தைகள் கேட்டு அழுகின்ற பொருளை வாங்கிக் கொடுக்க முடியாத பெற்றோர், மெல்ல மெல்ல கதை கொடுத்து பேரம் பேசலில் இறங்குவார்கள்.

பிள்ளைக்கு பெரிய பொம்மைதான் வேணுமோ? சின்னப் பொம்மை வேண்டாமோ?

இல்லை...எனக்கு பெரிய்ய்ய்ய பொம்மை வேணும். சின்னன் வேண்டாம்.

அழுகை தொடரும்.பேராசையை உண்டு பண்ணல்தான் பெற்றோரின் தூண்டில் புழு.

சரி பிள்ளைக்கு பெரிய பொம்மை வாங்கித் தரலாம். ஆனா இப்ப சின்னப் பொம்மை வாங்கிட்டு நாளைக்கு பெரிய பொம்மையும் வாங்குவம். அப்ப 2 பொம்மையும் பிள்ளைக்கு வந்திடும். இப்போது குழந்தையின் கண்கள் அகல விரியும். ஒரு பொம்மை கேட்டால் 2 பொம்மை கிடைக்கப் போகிறதே என்ற சந்தோசம் துளிர்க்கும்.

அப்ப சரி. ஆனா நாளைக்கு கட்டாயம் வாங்கி தரவேணும் பெரிய பொம்மை.

விடிய எழும்பின உடனேயே வந்து பெரிய பொம்மையை வாங்குறதுதான் முதல் வேலை அப்ப இப்போ சின்னப் பொம்மை வாங்குவம்.

குழந்தை தன் அடம்பிடித்தலில் இருந்து கீழிறங்க முயற்சிக்கும். அதுதான் சந்தர்ப்பம். பெற்றோரின் அடுத்த பேரம் பேசல் தொடங்கிவிடும்.

அப்ப சரி. பிள்ளைக்கு சின்னப் பொம்மையை வாங்குவம். எங்களுக்கு ஐஸ்கிறீம்.

குழந்தைக்கு இப்போது திண்டாட்டம். சின்னப்பொம்மையை வாங்கினால் ஐஸ்கிறீமுக்கு ஆப்பு. அது யோசிக்கும்.

எனக்கும் ஐஸ்கிறீம் . எனக்கும் ஐஸ்கிறீம் கொஞ்சம் கெஞ்சலாக ஆர்ப்பாட்டம் செய்யும்.

அப்ப பிள்ளைக்கு பொம்மை வேணுமோ? ஐஸ்கிறீம் வேணுமோ? ஐஸ்கிறீம் வாங்கினா பொம்மை வாங்க காசில்லையே எனக்கு ரண்டும் வேணும். அப்ப ஒண்டு செய்வம். இப்ப ஐஸ்கிறீமைக் குடிப்பம். நாளைக்கு வந்து பெரிய பொம்மையும், சின்னப் பொம்மையும் வாங்குவம்.

இந்த டீல்' குழந்தைக்கும் சரியென்றே படும். இப்போதைக்கு ஐஸ்கிறீம் கிடைத்தால் போதுமே. சரியென்று குழந்தை தலையாட்ட ஐஸ்கிறீமோடு அலுவல் முடிந்துவிடும். அடுத்த நாள் விடிந்தால் பெரிய பொம்மையாவது. சின்னப் பொம்மையாவது. எல்லாவற்றையும் மறந்துவிட்டு குழந்தை தன்பாட்டுக்கு வேறு விளையாட்டில் இறங்கிவிடும்.

----------------------------------

இந்தக் கதையில் வரும் குழந்தையின் நிலையில்தான் இப்போது போர்க்குற்ற விசாரணை தொடர்பில் கூட்டமைப்பு இருக்கிறது. முள்ளிவாய்க்கால் பேரவலம் நிகழ்ந்த பின்னர் சனல்-4 உள்ளிட்ட சர்வதேச ஊடகங்களில் போர்க்குற்றங்கள் தொடர்பான காணொலிகளும் , புகைப்படங்களும் வெளியாகி பெரும் சலசலப்பை உண்டுபண்ணின. இந்தச் சலசலப்பு வெறுமனே விடுப்புத்தீனியாக மட்டுமல்லாமல் புலம்பெயர் தமிழர்களையும், தமிழகத்து



உறவுகளையும் நீதி வேண்டிப் போராட்டங்களில் குதிக்க வைத்தது. புலம்பெயரிகள், தமிழக உறவுகள் என்போரின் இடைவிடாத போராட்டம் காரணமாக சர்வதேசம் இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் அதிக அக்கறை எடுத்துக் கொண்டது.

ஆனாலும் சர்வதேசத்தின் இந்த அதீத அக்கறைக்கு தனியே மக்களின் சாத்வீகப் போராட்டங்களே முழுக்க முழுக்க காரணம் என்று சொன்னால் அதைவிட முட்டாள்தனம் வேறு கிடையாது. எப்படியாவது இலங்கையில் மூக்கை நுழைத்துவிட வேண்டுமென அமெரிக்கா கால்கடுக்க காத்திருந்தது. ஏனென்றால் இலங்கையின் ஆட்சியாளராக அப்போதிருந்த மஹிந்த ராஜபக்ஷ , அமெரிக்காவுக்கு எதிரான நாடுகளான சீனாவையும், ஈரானையுமே தன்னுடைய நெருங்கிய கூட்டாளிகளாகக் கொண்டிருந்தார். அமெரிக்கா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளை பலவீனப்படுத்தும் வகையில் சீனா செயற்படுத்த நினைக்கும் முத்துமாலை' திட்டத்துக்கு இலங்கை மிக முக்கியமான இணைப்பு புள்ளி. இலங்கையை தன் இஷ்டப்படி ஆட்டுவிக்கும் தன்மையைச் சீனா அடைந்துவிட்டால் , முத்துமாலையென்ன முத்துச் சப்பர வியூகமே போட்டுவிடலாம். எனவே ராஜபக்ஷ கேட்கும் அபிவிருத்தித் திட்டங்களுக்கெல்லாம் சீனா அள்ளிக் கொடுத்தது.

சீனாவின் உபசரிப்பில் மயங்கிக் கிடந்த இலங்கைக்கும் , மஹிந்தவுக்கும் அமெரிக்கா ஒரு பொருட்டாகவே தெரியவில்லை. எகத்தாளமாகவே அமெரிக்காவுடனான உறவுநிலையை மஹிந்த கைக்கொண்டிருந்தார். சீனா மிகப் பலமாக இலங்கையில் காலூன்றத் தொடங்கியது. கொழும்புத் துறைமுக நகரத் திட்டம் என்ற பெயரில் இலங்கையின் தலைநகரில் தன் முத்துமாலை வியூகத்தின் இணைப்பு புள்ளியைத் தொடுக்க சீனா தயாராகிக் கொண்டிருந்தது. அதற்கிடையில் ஏதேனும் செய்யாவிட்டால்... அவ்வளவுதான். அமெரிக்காவின் கண்ணிலே விரலை விட்டு ஆட்டும் வல்லமை சீனாவுக்கு கைகூடிவிடும். இதற்கெல்லாம் ஒரேவழி இலங்கையை அமெரிக்காவின் சொல்பேச்சுக் கேட்கும் நிலைக்கு கொண்டுவர வேண்டும். சண்டித்தன ராஜபக்ஷவை குலை நடுங்கச் செய்ய வேண்டும். இதற்கு என்ன செய்யலாம் என்று

> **“இதுவரை காலமும் சர்வதேச விசாரணை வேண்டும் என அடம்பிடித்த கூட்டமைப்பு நிஷா பிஸ்வாலின் இலங்கை வருகையோடு உள்ளக விசாரணையே போதும் என்ற நிலைக்கு கீழிறங்கி வந்துவிட்டது. சர்வதேச விசாரணையை உறுதியானதாக்க வாக்கு கேட்டவர்கள், இப்போது சர்வதேச விசாரணையையே கைவிட்டு, உள்ளக விசாரணையே திருப்தி என்று ஒருதலைப்பட்சமாக முடிவெடுத்துள்ளார்கள். மக்களின்விருப்பு என்ன என்பதைக் கூட்டமைப்பினர் இந்த விடயத்தில் மறந்தே விட்டார்கள். இந்தப்பத்தியின் ஆரம்பத்தில் சொல்லப்பட்ட குழந்தையைப் போல உள்ளக விசாரணைக்கு கீழிறங்கி வந்துள்ள கூட்டமைப்பு, இன்னும் சில காலத்தில் உள்ஊரில ஆரும் விதானையைப் வைச்சு விசாரிப்பம். அதுவும் உள்ளக விசாரணை தானே என்று அமெரிக்கா சொல்வதற்கு தலையாட்டினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.”**

(22 ஆம் பக்கம் பார்க்க)



ஜி.எஸ்.எஸ்.

# கிரீடத்தை இழக்கும் கிரீஸ் 02

ஒரு காலத்தில் தன்னை பெரும் போராளியாக வெளிப்படுத்திக் கொண்டவர் சிப்ராஸ். பள்ளியில் படிக்கும்போதே மாணவர் தலைவர். அப்போது அவர் பல உயர்நிலைப் பள்ளி மாணவர்களை கூட்டிக் கொண்டு எதற்காகப் போராடினார் தெரியுமா? "நினைத்தபோது விடுப்பு எடுத்துக் கொள்ளும் சுதந்திரம் மாணவர் களுக்கு வேண்டும்". கிரீஸ் உயர்நிலைப் பள்ளிகளில் அப்போது ஒரு பழக்கம் இருந்தது. மாணவர்கள் என்றாவது பள்ளிக்கு வரவில்லை என்றால் இது குறித்த தகவல்கள் அந்த மாணவனின் பெற்றோருக்குத் தெரிவித்துவிடுவார்கள். இந்தச் செயல் முறையிலிருந்தும் மாணவர்களை விடுவிக்க வேண்டும் என்று களத்தில் குதித்தவர் சிப்ராஸ்.

எதென்ஸில் உள்ள தேசிய தொழில்நுட்பப் பல்கலைக் கழகத்தில் 'சிவில் என்ஜினியரிங்' பட்டம் பெற்றார். பிறகு 'நகர மற்றும் மண்டல திட்டம் வரைதல்' படிப்பில் முது கலைக் கல்வியை முடித்தார்.

அதிபர் கார்லோஸ் என்பவரால் பிரதமருக் கான உறுதிமொழியை எடுத்துக் கொண்டார் சிப்ராஸ். மிகவும் பழைய சரித்திரத்தை விட்டுவிட்டால் கிரீஸின் மிக இளமையான பிரதமர் இவர்தான்.

உறுதிமொழி எடுத்துக் கொண்டபோதே சில பிரிவினரிடம் அதிர்ச்சி அலைகளைப் பரப்பினார் இவர். பொதுவாக மத வழியில் தான் உறுதிமொழி எடுத்துக் கொள்வார்கள். 'கவலை வேண்டாம். கிறிஸ்தவ மத உயர்நிலையுடன் நான் மோத மாட்டேன்" என்று கூறியவர் உறுதிமொழியை மட்டும் நவீனமான முறையில் எடுத்துக் கொண்டார்.




"நான் ஒரு நாத்திகன். மதச் சடங்குகளைப் பின்பற்றி என் திருமணம் நடக்கவில்லை. என் குழந்தைகளுக்கு ஞான ஸ்நானமும் செய்ததில்லை. எனவே வழக்கமான முறையில் நான் உறுதிமொழி எடுத்துக் கொள்ள முடியாது" என்று கூறினார்.

சிப்ராஸ் திருமணம் செய்து கொள்ளவில்லை. ஆனால் பெரிஸ்டெரா என்ற பெண்ணைத் தனது பங்குதாரராக பதிவு செய்து கொண்டிருக்கிறார். (இருவரும் எந்த நிறுவனத்தையும் தொடங்கிவிடவில்லை. தனிப்பட்ட வாழ்வின் பங்குதாரர்). இருவரும் ஒரே உயர்நிலைப் பள்ளியில் படித்தவர்கள். பிறகு இருவருமே கம்யூனிஸ்ட் கட்சியின் இளைஞர் அணியின் உறுப்பினர் ஆனார்கள்.

அதன்பின் வாழ்க்கைத் துணைவர்களாக இருக்க முடிவு செய்தார்கள். இவர்களுக்கு இரண்டு மகன்கள். இரண்டாவது மகனுக்கு எர்னெஸ்டோ என்று பெயர் வைத்திருக்கிறார். இது சே குவேராவுக்கு அவர் செலுத்திய அஞ்சலி. (சே குவேராவின் முழுப் பெயர் எர்னெஸ்டோ சே குவேரா).

பிரதமர் ஆனவுடன் தான் கூட்டிய முதல் அமைச்சரவைக் கூட்டத்தில் தன்னுடைய முன்னுரிமைகளை இவர் தெளிவாக விளக்கினார். முதலில் கிரீஸில் உள்ள மனித உரிமைமீறல்களுக்கு முடிவு கட்ட வேண்டும். அடுத்து கிரீஸ் பட்டுள்ள பிரம்மாண்டமான கடனைத் தீர்ப்பதற்கான பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள வேண்டும், மூன்றாவதாக முந்தைய அரசின் தனியார்மயமாக்கல் கொள்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதோடு ஏற்கனவே நடைபெற்ற சில தனியார்மயங்களையும் வாபஸ் பெறவேண்டும்.

ஆனால் இவற்றில் இரண்டாவது பிரச்சினை பூதாகரமாக எழுந்து நின்று மற்ற இரண்டையும் பின்னுக்குத் தள்ளிவிட்டது.

........................

கிரீஸ் நாட்டின் பிரதமரான பிறகு சிப்ராஸ் முதலில் சென்றது இத்தாலிக்கு. அந்த நாட்டின் பிரதமருடன் சேர்ந்து ஒரு கூட்டு அறிக்கை விட்டார். கடன் சிக்கலில் இருந்து தீர்வதற்கான ஒரே வழி நிறைய வளர்ச்சித் திட்டங்களை நாடுகளில் அறிமுகப்படுத்துவதுதான்" என்றனர். (இத்தாலியும் நிறைய கடன் வாங்கியிருக்கும் ஒரு நாடுதான்).

சிப்ராஸ் விடைபெறும்போது இத்தாலிய ஜனாதிபதி ரென்ஸி அவருக்கு ஒரு டையை அன்பளிப்பாக அளித்தார். சிப்ராஸ் டை அணிவதில்லை. அது முதலாளித்துவத்தின் சின்னம் என்ற எண்ணம். இருந்தும்கூட இத்தாலிய அதிபரின் ஒத்துழைப்பை நெகிழ்ந்து அந்த டையைப் பெற்றுக் கொண்டார். கடன் தொடர்பாக நாங்கள் பல அமைப்புகளுடன் நடத்தி வரும் பேச்சுவார்த்தைகள் வெற்றியடைந்த பிறகு அதற்கான கொண்டாட்ட நாளின்போது இந்த டையை அணிந்து கொள்வேன்" என்றார். பாவம்!

பிறகு ஏப்ரல் மாதத்தில் மாஸ்கோவுக்கு விஜயம் செய்யவும் திட்டமிட்டார். ரஷ்யாவின் ஆதரவை நாடுவது முக்கியக் காரணம். ஜுன் 22 அன்று சிப்ராஸ் கொஞ்சம் கொஞ்சமாக தன் நாட்டு மக்களின் ஓய்வு வயதை 6% ஆக உயர்த்துவதாக ஒப்புக் கொண்டார். தவிர வாட் வரி முறையை முழுமையாக அமல்படுத்துவதாகவும் ஒத்துக் கொண்டார். இந்த வரி 23 சத வீதமாக இருக்க வாய்ப்பு உண்டு என்றும் அறிவித்தார்.

1981ல் ஐரோப்பிய யூனியனில் இணைந்த நாடு கிரீஸ். அதற்குமுன் கிரீஸின் கடுமையான நிதிநிலைமை அதிகமாக வெளியில் தெரியவில்லை. இதற்குக் காரணம் அது தன் கரன்ஸியான ட்ராஷ்மாவை இஷ்டத்துக்கு அச்சிட்டுக் கொண்டதுதான். இதனால் பணவீக்கம் மிகவும் அதிகரித்தது.

ஆனால் 2002ல் அது யூரோ கரன்சிக்கு மாற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஐரோப்பிய யூனியனில் உறுப்பினராவதற்கான நிபந் தனைகளில் அது ஒன்று. தவிர அப்படி மாறினால்தான் ஐரோப்பிய வங்கி கடன் அளிக்கும். அதற்குப் பிறகு கிரீஸின் நிஜமான பொருளாதார நெருக்கடி தெரியவந்தது.

'சிக்கன நடவடிக்கைகளை எடுங்கள். வரிகளை அதிகப்படுத்துங்கள். பொருளாதாரம் மேம்பட இதுவே வழி" என்றன கடன் கொடுத்த அமைப்புகள். ஆனால் கிரீஸ் ஆட்சியால் இவற்றை அமல்படுத்த முடியவில்லை. மக்களின் எதிர்ப்பை சந்திக்க பயம். காரணம் அவர்கள் ஏற்கனவே பணவீக்கத்தால் நொந்து போயிருக்கிறார்கள்.

ஐரோப்பிய யூனியனிலிருந்து கிரீஸ் வெளியேற வாய்ப்பு உண்டா? அப்படி வெளியேறினால் அது எந்தத் தரப்பை அதிகம் பாதிக்கும்? ஐரோப்பிய யூனியனில் உள்ள பிற நாடுகள் இது குறித்து என்ன நினைக்கின்றன?

(வளரும்)



## மனைவியின் ஆசை...

ஜிம் மற்றும் மேரி எனும் கலிபோர்னியாவை சேர்ந்த தம்பதிகள் 3 வருட கடின உழைப்பின் பின்னர் காண்டாமிருகம் ஒன்றினை உருவாக்கியுள்ளனர். எனினும் இதற்கு பின்னால் உள்ள கதை சுவாரஸ்யமாகவே காணப்படுகின்றது.

அதாவது மேரி தனது கணவரை பார்த்து வைன் போத்தலில் உள்ள தக்கைகளை பயன்படுத்தி பொழுதுபோக்காக ஏதாவது ஒரு உருவத்தை செய்யுமாறு கேட்டுள்ளார்.

கணவரும் 20 வருடங்களாக தம்மால் சேகரிக்கப்பட்ட தக்கைகளை கொண்டு ஒட்டகச்சிவிங்கி ஒன்றை வடிமைக்கவுள்ளதாக நெடுநாட்களாக கூறிவந்துள்ளார்.

எனினும் அதை செய்தபாடே இல்லை. இருந்தபோதும் கடந்த 3 வருடங்களுக்கு முன்னர் காண்டாமிருகம் ஒன்றினை வடிவமைக்க ஆரம்பித்து தற்போது வெற்றியடைந்துள்ளனர்.

12 அடிகள் நீளமான இந்த காண்டாமிருகத்தை வடிவமைப்பதற்கு சுமார் 12,000 தக்கைகள் பயன்படுத்தியுள்ளனர்.



## தாயின் சிறந்த கோயில் இல்லை

சீனாவில் கைகளை இழந்த நபர் ஒருவர் தனது தாயை பொறுப்புடன் கவனித்து வருவது நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சீனாவின் சாங்க்காங் நகரத்திற்கு அருகில் உள்ள டோங்க்சின் கிராமத்தை சேர்ந்தவர் சென் க்சிங்யின். இவருக்கு வயது -48.

வீட்டில் ஆறாவது பிள்ளையாக பிறந்த இவருக்கு, ஏழு வயதில் மின்சாரம் தாக்கியதில் இரண்டு கைகளையும் இழந்தார்.

இரு கைகளை இழந்தபோதும் தனது அன்றாடப்பணிகளை அவரே கவனித்து வருகிறார், மேலும் தங்களது குடும்பத்தொழிலான விவசாயம் மற்றும் ஆடு மாடுகளை மேய்க்கும் பணிகளையும் மேற்கொண்டு வருகிறார்.

இதில் நெகிழ்ச்சியூட்டும் விடயமாக, மூச்சுக்குழாய் அழற்சியால் பாதிக்கப்பட்டு படுத்த படுக்கையாய் இருக்கும் தனது 88 வயது தாயையும் நன்றாகக் கவனித்து வருகிறார்.

அன்றாடம் உணவுகளைத் தயாரித்து, அதனை தனது வாயில் பற்றியிருக்கும் ஸ்பூனால் தாயாருக்கு உணவை ஊட்டி வருகிறார்.





## செவ்வாயில் 'செல்பி'

செவ்வாய் கிரகத்தில் உயிரினங்கள் வாழ முடியுமா? என ஆய்வு நடத்த அமெரிக்காவின் நாசா மையம் கியூரியாசிட்டி விண்கலத்தை அங்கு அனுப்பியது யாவரும் அறிந்ததே. அந்த விண்கலம் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளது.

அங்குள்ள மலைகள், பாறைகள், மண்ணின் தன்மை, செவ்வாய் கிரகத்தின் அமைப்பு உள்ளிட்டவற்றை புகைப்படங்களாக அனுப்பியுள்ளது.

தற்போது அது தனது 'ரோபோட்டிக்' கரங்களால் செவ்வாய் கிரகத்தை செல்பி' எடுத்துள்ளது. அது போட்டோக்களை நாஸாவுக்கு அனுப்பி வைத்துள்ளது.

செவ்வாய்க் கிரகத்தில் 'மரியாஸ் பாஸ்' என்ற பகுதிக்கு நகர்ந்து சென்ற கியூரியாசிட்டி அங்கு பாறையை துளையிட்டு மாதிரியை எடுத்தது. அப்போது தனது 'ரோபோட்டிக்' கைகளால் அதில் உள்ள கமராவின் மூலம் 'செல்பி' எடுத்து அசத்தியது.

'மரியாஸ் பாஸ்' பகுதியில் மலை மீது ஏறுவது போன்றும் 'செல்பி' எடுத்து அனுப்பியுள்ளது.

சுடர் ஒளி
வாராந்த சஞ்சிகை
sudarolijaffna@gmail.com
361, கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 567 7609

# சாரதி அனுமதிப் பத்திரங்களை மிகுந்த தகுதி கண்டே வழங்குக

♦ **வாகனங்களைச் செலுத்துவதற்கான சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்கும் திணைக்களங்கள், தகுதியானவர்களுக்கு மட்டுமே அவற்றை வழங்க வேண்டும். அவர்களின் தகுதியை, தராதரத்தை ஊன்றிப் பரிசீலனை செய்தே, அதன் பின்னரே, அனுமதிப் பத்திரத்தைக் கொடுப்பதற்குப் பரிந்துரை செய்வது மிகவும் அவசியம்.**

♦ **சாரதி அனுமதிப் பத்திரத்தைப் பெறுவதற்கு, விண்ணப்பதாரிகள் போக்குவரத்து முறை குறித்த விதிமுறைகள் தொடர்பில் முழுமையான அறிவைப் பெற்றுள்ளனரா?**

**மேற்குறிப்பிடப்பட்டவற்றைத் தீர்க்கமாக ஆராய்ந்து, முழு அளவில் உறுதிப்படுத்திய பின்னரே அனுமதிப் பத்திரத்தை வழங்க வேண்டும் --**

**போக்குவரத்துச் செய்யும் மக்களின் நலன்நாடியே சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கப்பட வேண்டும் என்று அழுத்தி உத்தரவிட்டுள்ளார், யாழ்.மேல் நீதி மன்ற நீதிபதி மா.இளஞ்செழியன்.**

**மக்களின் போக்குவரத்து பாதுகாப்பானதாக அமையவேண்டும். அவர்களின் உயிர்களைப் பறிப்பதற்கோ, உடல் ஊனங்களை உண்டாக்கி அவர்களின் எதிர்கால வாழ்க்கையைச் சீரழித்து விடவோ எவருக்கும் உரிமையில்லை.**

**நீதிபதியின் அறிவுறுத்தலில் முழு அளவில் மனித நேயம் உள்ளார்ந்து அடங்கி உள்ளதை உணர இயல்கின்றது.**

**எமது பிராந்தியத்தில், வீதி விபத்துக்களை தவிர்க்கும் விழிப்புணர்வை உண்டாக்கும் வகையில் , யாழ். சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினால், நல்லூர் கந்தசுவாமி கோவில் வீதியில் நடத்தப்பட்ட நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசுகையிலேயே மேல் நீதிமன்ற நீதிபதி மேற்போந்த கருத்துக்களை முன்வைத்தார்.**

**அண்மைக் காலத்தில், சட்டம், ஒழுங்கு குறித்த மக்கள் நலன்நாடிய கருத்துக்களைக் காத்திரமாகவும், கனதியாகவும் வெளிப்படுத்துவதில் அவர் முன்னிலை வகிக்கிறார்.**

**மானிட மேன்மை கருதி அவர் வெளியிடும் கருத்துக்கள், எமது மக்கள் நற்குடிகளாக, சட்டம், வாழ்வியல், ஒழுக்க நெறிகளை உள்வாங்கி வாழ்வதற்குத் தம்மைத் தயார்ப்படுத்திக் கொள்வதற்கு மிகப் பெரிய அளவில் உதவும்.**

**இதேவேளை - விபத்துக்களை குறைப்பதால், தவிர்ப்பதால், அவற்றுக்கான சிகிச்சைகளின் தரத்தை உயர்த்தலாம் என்ற கருத்தை வெளியிட்டுள்ளார். என்புமுறிவு சத்திரசிகிச்சை நிபுணர் கோபி சங்கர்.**

**கடந்த இரண்டரை மாதங்களில் மட்டும், யாழ். மாவட்டத்தில் விபத்துக்களால் நாற்பத்தெட்டுப் பேர் உயிர்துறக்க நேர்ந்தது;**

**4,850 பேருக்கு எலும்பு முறிவும், 700 பேருக்கு தலைப்பகுதியில் பெரும் பாதிப்பும் ஏற்பட்டன என்ற அச்சம் தரும், அபாயகரமான புள்ளி விவரங்களையும் அவர் வெளிப்படுத்தியுள்ளார்.**

**வீதிகளால் வாகனங்களில் மற்றும் நடையில் பயணம் செய்யும் பாதசாரிகள் தங்கள் உயிரை, உடல் உறுப்புக்களைப் பாதுகாக்க எத்துணை கஷ்டம் உள்ளது என்பதை மேற்போந்த தகவல் - புள்ளி விவரம்- தொட்டுக் காட்டுகிறது.**

**இதனைத் தடுத்து, எண்ணிக்கையை சிறிதாக்க, மேல்நீதிமன்ற நீதிபதி தெரிவித்த கருத்துகள் சகல மக்கள் தரப்பினராலும் மனம் கொள்ளப்பட வேண்டியவை.**




பூமியின் வட பகுதியில் அறுபத்தி ஆறரை டிகிரி அட்ச ரேகை வரையுள்ள வட்டப் பகுதியானது ஆர்டிக் வளையம் என்று அழைக்கப்படுகிறது. ஆர்டிக் வளையம் என்னும் கற்பனைக் கோட்டுக்கு வடக்கே இருக்கும் 1.1 மில்லியன் சதுரமைல் பிரதேசம் ஆர்டிக் கண்டம் எனப்படும். உதவாத பனிப்பாறைகளைக் கொண்ட பிராந்தியம் எனப் பல ஆண்டுகளாக கருதப்பட்டு வந்த ஆர்டிக் கண்டம் தற்போது உலகின் முக்கியத்துவம் வாய்ந்த பிராந்தியங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றது.

**முந்திய அமெரிக்கா**

· 1909ஆம் ஆண்டு ஆர்டிக் கண்டத்துக்கு முதலில் சென்ற அமெரிக்கரான ரொபேர்ட் பியரி வடதுருவம் எனப்படும் பூமியின் வட முனையில் அமெரிக்கக் கொடியை நாட்டி இந்தப் பிராந்தியம் அமெரிக்காவினுடையது எனப் பிரகடனப்படுத்தினார். தற்போது நோர்டிக் நாடுகள் என அழைக்கப்படும் டென்மார், ஃபின்லாந்து, ஐஸ்லாந்து, நோர்வே, சுவீடன் ஆகிய நாடுகளும் ரஷ்யாவும், கனடாவும் ஐக்கிய அமெரிக்காவும் இந்த ஆர்டிக் கண்டத்தில் ஆதிக்கம் செய்யப் போட்டி போடுகின்றன.

**ஆடாத் ஆர்டிக் சபை**

பூமியின் தென் துருவத்தை ஒட்டிய அண்டார்டிக்கா கண்டத்தை ஒரு உடன்படிக்கையின் அடிப்படையில் சில நாடுகள் ஆய்வுகளை அங்கு மேற்கொள்கின்றன. ஆர்ஜெண்டீனா, ஒஸ்ரேலியா, பெல்ஜியம், சிலி, பிரான்ஸ், ஜப்பான், நியூசிலாந்து, நோர்வே, தென் ஆபிரிக்கா, ரஷ்யா, ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகள் அண்டார்டிக் கண்டத்தில் ஐம்பதிற்கு மேற்பட்ட விஞ்ஞான ஆய்வு மையங்களை நிறுவி ஆராய்ச்சிகள் செய்கின்றன. ஆனால் ஆர்டிக் கண்டம் தொடர்பாக ஒரு காத்திரமான உடன்படிக்கை ஏதும் செய்யப்படவில்லை. டென்மார்க், ஃபின்லாந்து, ஐஸ்லாந்து, நோர்வே, சுவீடன், ஆர்டிக் சபை என ஒன்றை நிறுவியுள்ளன. இவை ஆர்டிக்கின் சூழல் பாதுகாப்பு தொடர்பாகவும் அங்கு சிக்குப்பட்டவர்களை மீட்பது தொடர்பாகவும் உடன்பாட்டுக்கு வந்துள்ளன. இந்தச் சபை ஒரு அதிகாரமற்ற சபையாகும். ஆர்டிக் கண்டத்தின் மீதான உரிமைக்கு என ஒரு பன்னாட்டுச் சட்டமோ அல்லது உடன்படிக்கையோ இல்லை. இந்த ஆண்டில் இருந்து இரண்டு ஆண்டுகளுக்கு ஆர்டிக் சபை அமெரிக்காவின் தலைமையின் கீழ் இயங்கவிருக்கின்றது. உக்ரேனின் கிறிமியாவை ரஷ்யா தன்னுடன் இணைத்ததைத் தொடர்ந்து ஆர்டிக் சபையின் மற்ற நாடுகள் ரஷ்யாவுடன் கடுமையாக முரண்படுகின்றன.

**ரஷ்ய அமெரிக்கப் போட்டி**

ஐக்கிய நாடுகள் சபையின் கடற்சட்டத்திற்கான உடன்படிக்கையின் படி ஆர்டிக் பிராந்தியம் யாருக்கும் உரித்தானது அல்ல. ஆனால் ஆர்டிக் கண்டத்துடன் எல்லையைக் கொண்டுள்ள நாடுகளுக்கு 200 கடல்மைல்கள் தூரம் வரை பொருளாதார உரிமம் உண்டு. கடற்படுக்கைக்கும் எந்த நாடும் உரிமை கொண்டாட முடியாது. அது ஐக்கிய நாடுகளின் கடற்படுக்கைச் சட்டத்திற்கான உடன்படிக்கையின் படி உலக மக்களுக்கு சொந்தமானது. இதனால் ஆர்டிக் கண்டத்தின் கடற்படுக்கை ஐக்கிய நாடுகள் சபையின் கடற்படுக்கை அதிகாரசபைக்கு சொந்தமானதாகின்றது. 2007 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 2ஆம் திகதி ஆர்டிக்கா 2007 என்னும் பெயரில் ரஷ்யா ஆர்டிக் கடற்படுக்கைக்கு சிறு நீர்மூழ்கிக்கப்பல்களை அனுப்பி அதன் இயந்திரக் கரங்கள் மூலம் கடற்படுக்கையில் தனது கொடியை நாட்டி

**ஐக்கிய நாடுகள் சபையின் கடற்சட்டத்திற்கான உடன்படிக்கையின்படி ஆர்டிக் பிராந்தியம் யாருக்கும் உரித்தானது அல்ல. ஆனால் ஆர்டிக் கண்டத்துடன் எல்லையைக் கொண்டுள்ள நாடுகளுக்கு 200 கடல்மைல்கள் தூரம் வரை பொருளாதார உரிமம் உண்டு. கடற்படுக்கைக்கும் எந்த நாடும் உரிமை கொண்டாட முடியாது. அது ஐக்கிய நாடுகளின் கடற்படுக்கைச் சட்டத்திற்கான உடன்படிக்கையின் படி உலக மக்களுக்கு சொந்தமானது. இதனால் ஆர்டிக் கண்டத்தின் கடற்படுக்கை ஐக்கிய நாடுகள் சபையின் கடற்படுக்கை அதிகாரசபைக்கு சொந்தமானதாகின்றது.**

- வேல்தர்மா


அங்கிருந்து மணலையும் நீரையும் ஆய்வுகளுக்காக அள்ளிக் கொண்டது. ஆய்வில் கலந்து கொண்ட நிபுணர் ஆதர் சிலிங்கரோவ் ஆர்டிக் கண்டம் என்றும் ரஷ்யாவிற்குச் சொந்தமானது என்றார். இதைத் தொடர்ந்து அமெரிக்கா தனது Coast Guard icebreaker, the USCGC Healy என்னும் கப்பலை ஆர்டிக் கண்டத்திற்கு அனுப்பியது.

**எல்லாமே எண்ணெய்க்குத்தான்.**

ஆர்டிக் கண்டத்தில் ஆதிக்கம் செலுத்த பல நாடுகளும் முயல்வதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. ஒன்று அங்கு இருக்கும் பெருமளவு எரிபொருள் வளம். இரண்டாவது அங்கு பனிப்பாறைகள் தொடர்ந்து உருகிக் கொண்டிருப்பதால் அதனூடாக கப்பற் போக்கு வரத்துச் செய்ய வாய்ப்புண்டு. இதனால் வட அமெரிக்கா, வட ஐரோப்பா, ஜப்பான், சீனா ஆகிய நாடுகளிடையான வர்த்தகம் இலகுவாகவும் மலிவாகவும் நடக்க வாய்ப்புண்டு. ஆர்டிக் கண்டத்தினூடாக ஐந்து வேறு வேறு கடற்பாதைகள் இனம் காணப்பட்டுள்ளன. உலகின் கைத்தொழில் உற்பத்தியில் 80 விழுக்காடு உலகின் வட பிராந்தியத்தில் உற்பத்தி செய்யப்படுகின்றது. மேலும் ஆர்டிக்கில் பெரும் கடலுணவுகளும் கனிம வளங்களும் இருக்கின்றன. ஆனால் ஆர்டிக்கில் எண்ணெய் அகழ்வு செய்வது செலவு மிகுந்தது. எரிபொருள் விலை வீழ்ச்சியடையும் நிலையில் அங்கு எண்ணெய் அகழ்வது இலாபகரமானது அல்ல. ஆனால் காலப்போக்கில் எரிபொருள் விலை அதிகரிக்கும் போது அங்குள்ள எரிபொருள் மிகவும் தேவையானதாக மாறும். அத்துடன் சூழல் வெப்பமடைவதால் பனிப்பாறைகள் உருக எரிபொருள் அகழ்வது மலிவானதாக மாறலாம். உலகின் பாவனைக்கு உட்படுத்தப்படாத எண்ணெய் வள இருப்பின் 13 விழுக்காடும், எரிவாயு இருப்பின் 30 விழுக்காடும் ஆர்டிக் கண்டத்தில் இருப்பதாக நம்பப்படுகின்றது. யூரேனியம், இரும்பு, செப்பு, நிக்கல் ஆகிய உலோகங்களும் ஆர்டிக்கில் இருக்கின்றன. நெதர்லாந்தைச் சேர்ந்த உலகின் முன்னணி எரிபொருள் நிறுவனமான றோஜல் டச் ஷெல் ஆர்டிக் கண்டத்தில் எண்ணெய் அகழ்விற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை.

**போர்விமானங்கள்**

2015ஆம் ஆண்டு மார்ச் மாதம் ரஷ்யா 80,000படையினரையும், 220 போர் விமானங்களையும் 41 கப்பல்களையும் 15 நீர்மூழ்கிக்கப்பல்களையும் கொண்டு ஒரு பாரிய போர் ஒத்திகையை ஆர்டிக் பிராந்தியத்தில் செய்தது. 2018ஆம் ஆண்டளவில் ஆர்டிக் கண்டத்தில் ஒரு தன்னிறைவான படைத்தளம் ஒன்றை அமைக்கும் திட்டம் ரஷ்யாவிடம் உண்டு. நோர்வேயும் Operation Cold Response என்னும் குறியீட்டுப் பெயருடன் பல படைத்துறைப் பயிற்சிகளில் நேட்டோப் படைகளுடன் இணைந்து செய்து வருகின்றது. ரஷ்யாவை ஒட்டிய ஆர்டிக் கண்டத்தில் உள்ள எரிபொருள் வளங்களை பெறுவதற்கு அது ஆண்டு தோறும் 100பில்லியன் பெறுமதியான முதலீடுகளைச் செய்ய வேண்டும். அமெரிக்காவின் செய்மதிப்படங்களில் இருந்து ரஷ்யா தனது "ஓர்லன் - 10" என்னும் உத்திசார் ஆளில்லாப் போர்விமானங்களை ஆர்டிக் கண்டத்தில் நிறுத்தியிருப்பது கண்டறியப்பட்டுள்ளது. கனடாவும் தனது ஆளில்லாப் போர் விமானங்களை ஆர்டிக் கண்டத்தில் பறப்புகளில் ஈடுபடுத்தியுள்ளது. அமெரிக்காவின் பி-52 போர்விமானங்கள் 2015 ஏப்ரல் முற்பகுதியில் ஆர்டிக் கண்டத்தில் பறக்க வைத்தது. இது பயிற்சி நோக்கங்களுக்காக என வெளியில் சொல்லப்பட்டாலும் உண்மையான காரணம் ரஷ்யாவிற்கு சவால் விடுவதாகும். இந்தப் பயிற்சி நடவடிக்கைக்கு அமெரிக்கா துருவ உறுமல் எனப் பெயரிட்டிருந்தது. ஆர்டிக் பிராந்தியத்தை ஒட்டிய தனது நட்பு நாடுகளுக்கு நம்பிக்கை ஊட்டுவதாக அமைந்திருந்தது. ஆர்டிக் கண்டத்திற்குப் போட்டி போடும் எட்டு நாடுகளில் ரஷ்யாவைத் தவிர மற்றவை நேட்டோ படைத்துறைக் கூட்டமைப்பில் உள்ள நாடுகளாகும்.



**ரஷ்யா தனது "ஓர்லன் - 10" என்னும் உத்திசார் ஆளில்லாப் போர்விமானங்களை ஆர்டிக் கண்டத்தில் நிறுத்தியிருப்பது கண்டறியப்பட்டுள்ளது. கனடாவும் தனது ஆளில்லாப் போர் விமானங்களை ஆர்டிக் கண்டத்தில் பறப்புகளில் ஈடுபடுத்தியுள்ளது. அமெரிக்காவின் பி-52 போர் விமானங்கள் 2015 ஏப்ரல் முற்பகுதியில் ஆர்டிக் கண்டத்தில் பறக்க வைத்தது. இது பயிற்சி நோக்கங்களுக்காக என வெளியில் சொல்லப்பட்டாலும் உண்மையான காரணம் ரஷ்யாவிற்கு சவால் விடுவதாகும்.**

**அடிமாட்டு விலைக்குப் போன அலாஸ்க்கா**

ஐக்கிய அமெரிக்காவின் ஆர்டிக் கண்டத்தின் மீதான உரிமை கோரல்-அதற்குச் சொந்தமான அலாஸ்க்கா நிலப்பரப்பில் இருந்து உருவானது. ரஷ்யாவிற்குச் சொந்தமாக இருந்த அலாஸ்க்கா என்னும் வடதுருவப் பிரதேசத்தை அமெரிக்கா ஐம்பது ஏக்கர் ஒரு டொலர் என்ற விலைப்படி 1867ஆம் ஆண்டு வாங்கியது. சுமார் ஒரு நூற்றாண்டுக்கு மேல் தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்த அலாஸ்க்காவைப் பிரித்தானியப் பேரரசு ஆக்கிரமிக்கலாம் என்ற அச்சத்தில் ரஷ்யா அமெரிக்காவிற்கு மொத்தம் 7.2 மில்லியன் டொலருக்கு விற்பனை செய்தது. ஆனால் அலாஸ்க்கா அமெரிக்காவிற்கு ஒரு பொருளாதார ரீதியில் இலாபமளிக்கக் கூடிய ஒன்றாக இதுவரை இருந்ததில்லை. ஆனால் அலாஸ்க்காவிலும் எரிபொருள் வளம் உண்டு. ரஷ்யாவுடன் அமெரிக்கா எல்லையைக் கொண்டுள்ளது என்றால் அது அலாஸ்க்கா பிரதேசத்தில்தான். கிறிமியாவை ரஷ்யா தன்னுடன் இணைத்ததன் பின்னர் ரஷ்யாமீது அமெரிக்கா கொண்டு வந்த பொருளாதாரத் தடையால் ரஷ்யர்கள் மத்தியில் அமெரிக்காவிற்கு எதிரான குரோதம் வளரத் தொடங்கியது. கிறிமியா எங்களுடையது. அலஸ்க்கா அடுத்தது என்ற குரல் ரஷ்யாவில் ஒலிக்கத் தொடங்கியது. அலாஸ்க்காவை மீளக் கையளிக்கும் கோரிக்கை 37,000 பேர்களால் கையொப்பம் இடப்பட்டு வெள்ளை மாளிகைக்கு அனுப்பப்பட்டது. கிறிமியா எங்களுடையது. அலஸ்க்கா அடுத்தது என்ற பதாகையுடன் பென்குவின் பறவைகள் பல ஊர்வலம் போவது போல ஒரு படம் கணனியில் ரஷ்யர்களால் உருவாக்கப்பட்டு பரவ விடப்பட்டது. ஆனால் பென்குவின் பறவைகள் ஆர்டிக் கண்டத்திலோ அல்லது அலாஸ்க்காவிலோ வாழ்வதில்லை ரஷ்யர்களின் அறிவிலித்தனம் என அமெரிக்கர்கள் நையாண்டி செய்தனர். ஆனால் கிறிமியாவை இணைத்ததன் மூலம் ஒரு பெரும் வரலாற்றுத் தவறைச் சீர் செய்த விளடிமீர் புட்டீன்

அடுத்த வரலாற்றுத் தவறான அலாஸ்கா விற்பனையையும் சீர் செய்ய வேண்டும் என பல ரஷ்யர்கள் கருதுகின்றார்கள். அலாஸ்க்காவின் முப்பது ரஷ்ய மரபுவழிக் கிறிஸ்த்தவ தேவாலயங்கள் உள்ளன. அலாஸ்க்காவின் ஸ்புருஸ் தீவு ரஷ்யத் திருச்சபைக்குச் சொந்தமானது என்றும் அதை விற்கவோ அல்லது வாங்கவோ யாராலும் முடியாது என்றும் ஒரு ரஷ்ய சரித்திர அறிஞர் வாதிடுகின்றார். ரஷ்யாவின் மிக் - 31, ரியூ- 95 ஆகிய போர் விமானங்கள் அலாஸ்க்காவை ஒட்டிய வான்பரப்பில் பறப்பது

(22ஆம் பக்கம் பார்க்க)




# வட, தென் கொரிய தெருச்சண்டை

தெருச்சண்டைகளை ஓரமாக நின்று பார்க்க வேடிக்கையாக இருக்கும். ஆனால் நாட்டுக்கு நாடு தெருச் சண்டை பார்க்க வேண்டுமானால் கடன் பட்டாவது கொரிய நாடுகளின் எல்லைக்கு போக வேண்டும்.

அந்த சண்டை தெருச் சண்டையை விடவும் கேவலமாக இருக்கும். அடிக்கடி வன்முறையாகவும் மாறுவதால் வேடிக்கை பார்ப்பதென்றால் கவனமாக ஒதுங்கி நிற்க வேண்டும்.

வடகொரியா, தென் கொரியா என்ற இந்த இரு நாடுகளுக்கும் இடையிலான தெருச்சண்டை இன்று நேற்று ஆரம்பமானதல்ல.

இரண்டாவது உலகப் போரோடு ஆரம்பமான வரலாற்று பெருமை கொண்டது. கடந்த அரை நூற்றாண்டுக்கு மேலாக இப்போது அடித்துக் கொள்வார்கள், நாளை சண்டை பிடிப்பார்கள் என்று வேடிக்கை பார்த்து ஏமாந்த தெருச் சண்டை பிரியர்கள் ஏராளம்.

கடந்த வாரம் இந்த தெருச் சண்டை முற்றி இரு நாடுகளும் பரஸ்பரம் தாக்குதல் நடத்திக் கொண்டன.

வட கொரியா ஷெல் தாக்குதல் நடத்த, பதிலுக்கு தென் கொரியா ஏகப்பட்ட பீரங்கி குண்டுகளை போட்டது. இதிலே சுவாரஸ்யமான கதை வடகொரியா ஷெல் தாக்குதல் நடத்தியது. தென் கொரிய எல்லையில் சத்தமாக கூச்சலிட்டுக் கொண்டிருந்த ஒலிபெருக்கிகளை நோக்கியாகும்.

எல்லைப் பகுதியில் ஒலிபெருக்கிகளை வைத்து தம்மை திட்டி கடுப்பேற்றியதால்தான் வடகொரியா அந்த அப்பாவி இலத்திரனியல் கருவிகள் மீது ஷெல் தாக்குதல் நடத்தியது.

வடகொரியா, தென் கொரியாவுக்கு இடையில் ஒலிபெருக்கி மூலம் திட்டித் தீர்க்கும் சண்டை கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக விடுபட்டிருந்தது.

ஆனால் தென் கொரியா அந்த கௌரவமான நடைமுறையை கடந்த வாரம் ஆரம்பித்தது. பெரிதாக ஒன்றுமில்லை.

தென்கொரியா தனது வட கொரிய எல்லையில் ஒலிபெருக்கிகளை பொருத்தும். அந்த ஒலிபெருக்கிகளை சத்தமாக போட்டு வட கொரிய எல்லையில் இருப்பவர்களுக்கு கேட்கும்படி அந்த நாட்டை ஆத்திரம் முடியும் வரை திட்டித் தீர்க்கும்.

அடிக்கடி தென் கொரியாவை புகழ்ந்துபாடும். சர்வதேச செய்தி எல்லாம் ஒலிபரப்பி, அறிவையும் வளர்க்கும். இந்த ஒலிபெருக்கியின் நச்சரிப்பு பொறுக்க முடியாத வட கொரியா அதனை நிறுத்தும்படி பலமுறை எச்சரித்தது.

நிறுத்தாத படியால் ஒருநாள் கழித்து வட கொரியாவும் தனது எல்லையில் ஒலிபெருக்கியை பொருத்தி தென்-கொரியாவை பதிலுக்கு திட்டித் தீர்த்தது.

என்றாலும் வட கொரியா தனது உத்தம தலைவர் கிம் ஜொங் உன்னை திட்டினால் பொறுத்துக்கொண்டிருக்காது என்பது தென் கொரியாவுக்கு நன்றாக தெரியும்.

எனவே உசுப்பேற்றும் வகையில் தென் கொரியாவும் அதனையே செய்கிறது. தென் கொரியா இப்படி ஒலிபெருக்கி கொண்டு திட்டுவதோடு நிற்காது.

பலூன்களில் துண்டு பிரசுரங்களை கட்டி அதனை வடகொரியாவை நோக்கி பறக்க விட்டு வசைபாடும். கடந்த ஆண்டு இப்படி பலூன் பறக்கவிட்டதால் கோபமடைந்த வடகொரியா தென் கொரியாவை நோக்கி கண்மூடித்தனமாக சுட்டு பரபரப்பை ஏற்படுத்தியது.

கொரிய நாட்டு எல்லைகளில் இது மட்டுமல்ல, வேடிக்கை பார்க்க இன்னும் பல சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறும்.

இரு நாடுகளும் அடுத்த நாட்டுக்கு தெரியும்படி இராட்சத பதாகைகள் செய்து அதன் மூலம் எதிரி நாட்டை திட்டித் தீர்க்கும். பொதுவாக வடகொரியா கம்யுனிஸ்ட் நாடு என்பதால் அங்கும் கிறிஸ்மஸ், புத்தாண்டு கொண்டாட்டங்கள் இடம்பெறுவதில்லை.

எனவே அப்படியான நாட்களில் தென்கொரியா தனது வட கொரிய எல்லையில் கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களை பெரிதாக நடத்தி வட கொரியாவின் ஆத்திரத்தை மேலும் பல டிகிரிக்கு உயர்த்தும்.

அப்போது பல அடி உயரத்திற்கு வைக்கப்படும் கிறிஸ்மஸ் மரத்தை அகற்ற கோரி வட கொரியா எச்சரிக்கையை விடுப்பது வழமையான கதை.

ஒரு வாரத்திற்கு முன் இரு நாட்டு எல்லையின் தென் பகுதியில் இருக்கும் இராணுவ மயமற்ற வலயத்தில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த இரு தென்கொரிய வீரர்கள் கண்ணி வெடியில் சிக்கி காயமடைந்தார்கள். ஒரு வீரரின் இரு கால்களும் பறிபோனது. மற்றொரு வீரரின் ஒருகால் சிதறியது.

தென் கொரிய எல்லையில் போய் யாரும் பொழுது போக்கிற்கு குண்டு வைக்க மாட்டார்கள். வைத்திருந்தால் அது வட கொரியாவாகத் தான் இருக்க வேண்டும்.

எனவே தென் கொரியா, வட கொரியா மீது குற்றம் சாட்டியதில் பிழையேதும் இருக்காது. இந்த

**- எஸ்.பிர்தௌஸ்**

கோபத்தில்தான் வட கொரிய எல்லைக்குப் போய் தென் கொரியா ஒலிபெருக்கிகளை கட்டி திட்டும் பணியை ஆரம்பித்தது.

வட கொரியாவின் கோபத்தை கிளறுவதில் முக்கிய பங்களிப்பு செய்யும் பெருமை அமெரிக்காவுக்கும் சேரும். அமெரிக்கா ஒவ்வொரு ஆண்டும் தென் கொரியாவுடன் இராணுவ ஒத்திகையில் ஈடுபடும்.

நூற்றுக் கணக்கான படையினர் நிலத்திலும் நீரிலும் வானத்திலும் பார்ப்பவர்களை பயமுறுத்தும் வகையில் பயிற்சி செய்தால் எந்த எதிரிக்கு கோபம் வராது.

தற்பாதுகாப்பிற்கான பயிற்சி என்று அமெரிக்கா, தென் கொரியா இந்த இராணுவ ஒத்திகையை அழைத்துக் கொண்ட போதும் பார்ப்பதற்கு ஆக்கிரமிப்பொன்றை நடத்துவதற்கான பயிற்சி ஒன்று போல் தெரிகிறதே என்று வட

(22ஆம் பக்கம் பார்க்க)






# காலம் கடந்த ஞானம்

நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் வெளிவந்த பின்பு செய்தியாளர் சந்திப்பு ஒன்றை நடத்திய தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தேர்தலில் தமிழ் மக்கள் வழங்கிய தீர்ப்பை தான் ஏற்றுக்கொள் வதாகவும் , தேர்தல் காலத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படுமானால் தாங்கள் ஒத்துழைக்கவும் இணைந்து செயற்படவும் தயார் எனவும் தெரிவித்தார்.

நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெற்று முடிந்த பின்பு இப்படி ஒரு அறிவித்தல் வெளிவருவது காலம் கடந்த பின்பு பிறந்த ஞானத்திலிருந்து தோன்றியது என்றே கருத வேண்டியுள்ளது. தேர்தலில் ஒரு ஆசனத்தைக் கூடக் கைப்பற்ற முடியாத நிலையில் இந்த அறிவிப்பு அவர்களின் ஆற்றாமை காரணமாக வெளிப்பட்டது எனச் சிலர் கூறவும் கூடும்.

ஆனால் அப்படிக் கூறுவது வெற்றியின் மிதப்பில் உருவாகும் அகங்காரத்திலிருந்து பிறப்பதாகும். ஏனெனில் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஒரு காத்திரமான பங்கை வகித்து வருகிறது என்பதை எவரும் மறுத்து விட முடியாது.

ஆனால் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு வழங்கப்பட்ட ஒவ்வொரு வாக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு விழ வேண்டிய வாக்குகளே. அந்த வாக்குகள் நிச்சயமாக ஈ.பி.டி.பிக்கோ, ஐக்கிய தேசியக் கட்சிக்கோ, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கோ அல்லது சுயேட்சைக் குழுக்களுக்கோ வழங்கப்பட்டிருக்க முடியாது.

எனவே இந்தத் தேர்தலில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி போட்டியிடாமல் விட்டிருந் தாலோ அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிட்டிருந்தாலோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெரும் வெற்றியை பெற்றிருக்க முடியும். யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் 7 ஆசனங்களையும் கைப்பற்றும் நிலை கூட ஏற்பட்டிருக்க முடியும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப் புக்கு விழ வேண்டிய வாக்கு களைப் பிளவுபடுத்தியமை, ஒரு தரப்பினரை மறுதரப்பு திட்டித் தீர்த்ததில் மக்களுக்கு எழுந்த குழப்பங்கள் என்பனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 5 ஆசனங்களை மட்டுமே பெறும் நிலைமையை ஏற்படுத்தியது என்பதை மறுத்து விட முடியாது.

2010ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலில் இரு தரப்பும் மோதிக் கொண்டதால் ஈ.பி.டி.பி 3 ஆசனங்களையும், ஐக்கிய தேசியக் கட்சி ஒரு ஆசனத்தையும் பெற முடிந்தது. ஆனால் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களிலும் , மாகாண சபைத் தேர்தலிலும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி போட்டியிடாத காரணத்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 95 வீத வெற்றியைப் பெற்றது.

இந்த அனுபவத்திலிருந்து இரு தரப்பினரும் கற்றுக் கொள்ள மறுத்து கிடைக்கக் கூடிய பெரும் வெற்றியில் பாதிப்பை ஏற்படுத்தி யது மட்டுமன்றி ஈ.பி.டி.பிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் வாய்ப்பை வழங்கியுள்ளனர்.

இரு தரப்பும் ஒரே அடிப் படையைக் கொண்டவர்கள். இரு தேசம் ஒரு நாடு என்பது ஒரு தரப்பின் கோஷம். சமஷ்டி என்பது மறு தரப்பின் கோஷம். இரு தனித்துவமான தேசங்களோ, பிரதேசங்களோ ஒரே நாடாக தனித்துவத்தைப் பேணி ஒன்றிணைந்து ஒரே நாடாக இயங்கும் போது அதுவே சமஷ்டியாகிறது. சோவியத் யூனியன், பிரான்ஸ், சுவிற்சர்லாந்து, செக்கஸ்லாவோக்கியா, யூகோஸ்லவோக்கியா எனப் பல்வேறு நாடுகளிலும் இந்த அரசியலமைப்பே நிலவியது. எனவே இரு தரப்பினரும் ஒரே கொள்கையை வெவ்வேறு வார்த்தைகளில் வெளியிட்டனர் என்பது தான் உண்மை.

அதையும் விட தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்பது அன்று சிதறிக் கிடந்த தமிழ் அரசியல் தலைமைகளை ஒன்றிணைத்து உருவாக்கப்பட்ட ஒரு அமைப்பு.அதில் இருதரப்பினரும் அங்கம் வகித்தனர். அது மட்டுமின்றி கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மூலமே நாடாளுமன்ற அரசியலுக்கு அறிமுகமானவர்கள்.

எனவே, தமிழ்த்தேசியக்கூட் டமைப்பில் தமிழரசுக்கட்சி, ஈ.பி.ஆர்.எல்.எவ். ,ரெலோ ஆகிய கட்சிகளுக்கு உள்ள அதே உரிமை தமிழ்க்காங்கிரஸ் அதாவது தமிழ்த்தேசிய மக்கள் முன்னணிக்கும் உண்டு.

அப்படியானால் ஏன் இந்த இரு தரப்பும் தனித்தனியாக இயங்கி ஒருவருடன் ஒருவர் போட்டியிட வேண்டும். 2005 ஆம் ஆண்டு ஆசனப் பங்கீடு தொடர்பான முரண்பாடுகளே இவர்கள் பிரிவுக்குக் காரணம் எனக் கூறப்பட்டது. அப்படியானால் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை தமிழ்த் தலைமை கள் நாடாளுமன்றப் பதவிகளுக் குள் முடக்கிவிட்டனவா?

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் தலைமைப்பீடத்தில் உள்ள சிலரின் நடவடிக்கைகள் தமிழ் மக்கள் மத்தியில் சில கசப்புணர்வுகளை ஏற்படுத்தியுள்ளது என்பது உண்மை. ஆனால், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தோற்கடிக்கவோ, தமிழ் மக்களின் ஐக்கியத்தைப் பலவீனப்படுத்தவோ தயாரில்லை என்பதை மீண்டும் மீண்டும் ஒவ்வொரு தேர்தலிலும் வெளிப்படுத்தி வந்துள்ளனர்.

எனவே கஜேந்திரகுமாரின் அறிவிப்பு தீர்க்கமாக தமிழ் மக்களுக்கு மகிழ்ச்சியளிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தக் காலம் கடந்த ஞானம் தொடர்பாக என்ன நிலைப்பாடு எடுக்கும் என்பது இதுவரை தெரியவில்லை. எப்படியிருப்பினும் இரு தரப்பின ரும் தமிழ் மக்களின் நலன் கருதி ஐக்கியப்படத் தவறினால் தமிழ் மக்கள் மேலும் பல பின்னடைவு களைச் சந்திக்க வேண்டி வரும் என்பது உணரப்பட வேண்டும்.

**தேர்தலில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி போட்டியிடாமல் விட்டிருந் தாலோ அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிட்டிருந்தாலோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெரும் வெற்றியை பெற்றிருக்க முடியும். யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் 7 ஆசனங்களையும் கைப்பற்றும் நிலை கூட ஏற்பட்டிருக்க முடியும்.**


# சிம்மசொப்பனம் - 37

காஸ்ரோவின் இப்போதைய பிரச்சினை சட்டப்படிப்பை எப்படி முடிப்பது என்பது தான். நிறைய பாடங்களை படிக்க வேண்டியிருந்தது. நேரம் தான் இல்லை. அரசியல், கிளர்ச்சி, கம்யூனிஸ்ட் கட்சி போன்ற சுவாரஸ்யமான சங்கதிகள் அவர் கையைப்பிடித்து இழுத்துக் கொண்டிருந்தன. காஸ்ட்ரோவைப் போலவே அவர் மனைவி மிர்தாவுக்கும் ஒரு பிரச்சினை. அறைக்குக் குடிபெயர்ந்தாகிவிட்டது. எல்லாம் சரி தான். ஆனால், வீட்டில் எந்தச் சாமான்களும் இல்லையே, என்ன செய்வது? காசு, பணம் என்று வந்து விட்டால் காஸ்ட்ரோவை நம்பிப் பயனில்லை. இப்போதும் நண்பர்கள் தான் உதவிக்கு வந்தனர். வீட்டுக்குத் தேவையான அனைத்து சாமான்களையும், நாற்காலி, மேசை போன்ற பொருள்களையும் தவணை முறையில் வாங்கித் தந்தனர். ஆனால் தவணை கட்டுவதற்குக் கூட காசில்லை.

பொருள்களை விற்ற கடைக்காரர் ஒரு நாள் வீட்டுக்கு வந்து எல்லா சாமான்களையும் தூக்கிக் கொண்டு போய் விட்டார். காஸ்ட்ரோ வழக்கம் போல் வீட்டுக்கு வந்தார். வாசித்தார். எங்கே இங்கேயிருந்த சாமான்களைக் காணவில்லை?என்று மிர்தாவிடம் ஒரு கேள்வி கூடக் கேட்கவில்லை. கேட்கவும் மாட்டார். ஏனென்றால் முதலில் இந்தப் பொருள்கள் அவருடைய வீட்டுக்குள் இருந்ததே அவருக்குத் தெரியாது. மீண்டும் நண்பர்கள் கடைக்காரரைச் சரிக்கட்டி விட்டு பொருள்களை காஸ்ட்ரோவின் வீட்டுக்குக் கொண்டு சென்றனர். காஸ்ட்ரோ வழக்கம் போல் வீட்டுக்கு வந்தார். மிர்தாவிடம் சில வார்த்தைகள் பேசினார். பிறகு ஒரு புத்தகத்தைப் பிரித்து வைத்துக் கொண்டு அமர்ந்து விட்டார். வெறுப்படைந்த நண்பர்கள் அவரைத் தரதரவென்று பிடித்து இழுத்துப் போய் அனைத்துச் சாமான்களையும் காட்டி நடந்தவற்றைச் சொன்னார்கள். காஸ்ட்ரோ எல்லாவற்றையும் கேட்டு விட்டு அவர்களைப் பார்த்து ஒரே ஒரு கேள்வியைத்தான் கேட்டார். அடடா! அப்படியானால் இது என் வீட்டுச் சாமான்தானா!

இத்தனை இருந்தாலும் ஒரு வழியாக சட்டப்படிப்பை முடித்தே விட்டார் காஸ்ட்ரோ. மிர்தாவுக்கு நிம்மதி! தன் கணவன் வழக்கறிஞர் ஆகிவிட்டார். இனி வீட்டில் எந்தப் பிரச்சினையும் இருக்காது. கடன் தொல்லைகள் இருக்காது. அது மட்டுமன்றி வழக்குகள் என்று வந்து விட்டால் பிறகு மறியல், ஆர்ப்பாட்டம், கூட்டம் என்று சுற்றிக்கொண்டிருக்க முடியாது. அப்படியே சுற்றினாலும் காவல்துறை வழக்கறிஞரான இவரை, கைது செய்ய முடியாது.

(தொடரும்)



## சொற்சிலம்பம் போட்டி இல. 688

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | ■ | 5 | 6 |
| 7 | | | | ■ | 8 | | |
| | ■ | 9 | | 10 | | ■ | |
| 11 | 12 | | ■ | 13 | | 14 | |
| 15 | | ■ | 16 | ■ | 17 | | ■ |
| | ■ | 18 | | 19 | | ■ | 20 |
| ■ | 21 | | | | ■ | 22 | |
| 23 | | | ■ | 24 | | | |

**மேலிருந்து கீழ்**

1 - எல்லோருக்கும் எல்லாமும் ஒரே மாதிரியாகக் கிடைக்கும் நிலை.
2 - உயிர்ப்பின் ஆரம்பம்.
3 - இராமாயணத்தில் கூனி போன்று மகாபாரத்தில் இவர்.
5 - தீய செயல்.
6- அகம்பாவம்.
8 - கூடிக்களித்தல்.
10- அந்தரி.
12- பீதி/ அச்சம்/பயம்.
14- ஒரு கிரகம்.
16- பழைய அல்ல.
18- விடை.
19- உலோகத்தை மெல்லிய நீளமாய் வார்த்தால் வருவது.
20- திருமணம் செய்யாத இளம்பெண்.
21- அறிவு.
22-ஒரு நிறம்.

• • • • • • • • • • • • • • •

**இடமிருந்து வலம்**

1 - ஒன்றாய் வாழ்ந்த பண்பு.
5- கூட்டல் குறி.
7- நெருக்கமாக.
8- ஒரு வகை ஆட்டம்.
9 -பழுத்தல்.
11 - புடைவை.
13- முகவரி
15 -நோவு.
17 -இது வந்தாலும் கூதலும் வரும்.
18- நாயன்மார் பாடியது.
21- நண்பகல் வேளை.
22- நிலம்.
23- சுவர்.
24-சேனாதிபதி.

அனுப்புபவர் பெயர்:------------------------------------

விலாசம்:------------------------------------

------------------------------------------------

அனுப்ப வேண்டிய முகவரி:

**சுடர் ஒளி யாழ்.அலுவலகம்,**

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

பரிசுக்குரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில், காலை 9.00 மணி முதல் பிற்பகல் 4.00மணி வரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி யாழ். உதயன் அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம். மேலதிக தொடர்புகளுக்கு 021 567 7609 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

### பாராட்டுப் பெறுவோர்

S.K.குணபாலன், அளவெட்டி கிழக்கு, அளவெட்டி.

சு. சுதாகரன், தொட்டிலடி மத்தி, சண்டிலிப்பாய்.

செ. சின்னத்துரை, இல 131-D-10, உருத்திரபுரம்.

வே. சரஸ்வதி, அம்பன், குடத்தனை.

வீ. செல்வநாயகம், சிவன்கோவில் வீதி, புத்தூர்.

## சொ. சி .போட்டி இல 688

■ சொற்சிலம்பம் போட்டி 688ற்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2015 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம்16 ஆம் திகதி ஆகும்.

■ விடைகள் மற்றும் வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் முறையே 2015, செப்ரெம்பர் 23 மற்றும் செப்ரெம்பர் 30ஆம் திகதிய சுடர்ஒளியில் பிரசுரமாகும். தாளலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

■ 1ஆம் பரிசாக ரூபா 250 உம், 2ஆம் பரிசாக ரூபா 150 உம், 3ஆம் பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

• • • • • • • • • • • • • • • • • • • • • • • • • •

### போட்டி இல 685இல் பரிசு பெற்றோர்

1 பா.நியூட்டன் சதீஷ், மீசாலை கிழக்கு, மீசாலை.

2 க.கமலேஸ்வரன், இல 791, கட்சன் வீதி, வட்டக்கச்சி, கிளிநொச்சி.

3 [illegible], இல 77, இரண்டாம்பகுதி, விசுவமடு மேற்கு (தொட்டியடி) விசுவமடுக்குளம்.

### சொற்சிலம்பம் போட்டி 686இன் விடைகள்

**மேலிருந்து கீழ்**

1.பஞ்சமி.
2.தேவாரம்.
3.சினம்.
4.சம்பவம்.
5.திரனி.
8.வகுப்பு.
10.சனி.
12.பலன்.
13.நரம்பு.
14.உடும்பு.
15.தப்பு.
16.தாரம்.
17.பல.
19.பல்

**இடமிருந்து வலம்**

1.பரதேசி.
4.சடுதி.
6.வானரம்.
7.சவரம்.
9.பசளி.
11.மிகும்.
12.பவனி.
13.நலம்.
15.தபுதாரன்.
17.படு.
18.ரம்.
19.பலம்.
20.புலம்புதல்.

- பிரமன்




# நீங்கள் வேற நாடய்யா. நாங்கள் வேற நாடு

**அவர் ஒரு நாய்ப்பிரியர். அவரை எப்போது பார்த்தாலும் நாயுடன் தான் பார்க்கலாம். குழந்தையைப் பராமரிப்பது போல அந்த நாய்க்கும் பார்த்துப் பார்த்து தேவையானதெல்லாம் செய்வார். அப்படிப் பட்ட நாய்பிரியர் ஒருநாள் அந்த நாயைக் கட்டி வைத்து அடித்துக் கொண்டிருந்தார். இதனை அவதானித்த அவரின் நண்பர், என்னடாப்பா, நாயைக் குழந்தை மாதிரிப் பாப்பாய். இப்ப திடீரெண்டு கட்டி வைச்சு அடிக்கிறாய்? ஏதும் சாப்பாட்டை களாவாய் திண்டிட்டோ? என்று கேட்டார். அதற்கு நாய்ப்பிரியர் சொன்னார், இந்த நாய்க்கு எது செய்தாலும் சந்தோசப்படுகுதில்லை. அதுதான் அதைச் சந்தோசப்படுத்த நாயை அடிக்கிறன்.**

**நண்பருக்கு ஒன்றும் விளங்க வில்லை. நெற்றியைச் சுருக்கியபடி, நாயைச் சந்தோசப்படுத்த கட்டிவைச்சு அடிக்கிறியோ? இதென்ன புதுக்கதை? என்று அவர் கேட்க, நாய்ப்பிரியர் மெல்லச் சிரித்தார். பிறகு சொன்னார்,**

**இப்ப நாயை அடிக்கேக்க அது வலியால துடிக்கும். கத்திக் குளறும். ஆனா அடிக்கிறதை நிப்பாட்டினா.... அது அந்த நேரத்தில சந்தோசப்படுமெல்லோ. அதுதான் அடிக்கிறன் என்றாராம்.**

----------------

இரண்டாம் உலகப்போர் நடந்த காலத்தில் இந்தக் கதை மிகவும் பிரபலம். அப்போது ஜேர்மன் அரசு , தான் ஆக்கிரமித்த நாடுகளில் இறுக்கமான சட்டங்களைக் கொண்டுவரும். இதனால் மக்கள் சொல்லொணாத் துயரங்களைச் சந்திக்க வேண்டியிருக்கும். ஜேர்மனுக்கு எதிரான அலை எழும். உடனேயே தாங்கள் போட்ட சட்டங்களில் சிலவற்றை ஜேர்மனி தளர்த்தும். உடனே மக்கள் மகிழ்ச்சிபெருக்கோடு ஜேர்மனியையும் ஹிட்லரையும் வாழ்த்துவார்கள். அதுவரை ஹிட்லர் செய்த அட்டூழியங்களை மறந்து போவர்கள். குறித்த சட்டத்தை வலிந்து திணித்து தம்மை இவ்வளவு காலமும் ஆட்டிப் படைத்தது ஜேர்மனி என்பதை மறந்து, இயற்கையாகவே விதிக்கப்பட்டிருந்த சட்டமொன்றை ஜேர்மனியும் ஹிட்லரும் போராடி வென்று கொடுத்த உணர்வையே அவர்கள் பெறுவார்கள்.

ஓமந்தைச் சோதனைச் சாவடி அகற்றப்பட்ட செய்தி வந்தவுடன் இந்தக் கதைதான் சட்டென நினைவுக்கு வருகின்றது.

------------------------------

ஓமந்தை - வவுனியா மாவட்டத்தில் உள்ள ஒரு கிராமத்தின் பெயர். ஆனால் ஓமந்தை என்றவுடன் தமிழர்கள் அனைவருக்கும் நினைவுக்கு முதலில் வருவது அங்குள்ள




சோதனைச்சாவடிதான். இரண்டாம் ஈழப்போரோடு ஓமந்தையில் நிரந்தரமாக இந்தச் சோதனை நிலையம் அமைக்கப்பட்டுவிட்டது. இங்கு வைத்துதான் தென்னிலங்கைக்கு செல்பவர்களுக்கு அரசு அனுமதி வழங்கும்.

90 களில் ஓமந்தைச் சோதனைச் சாவடியை அடைவதற்குள் உயிர் போய் விடும். அதுவும் யாழ்ப்பாணத்தில் இருந்து போவதென்றால் உலகிலேயே அதைவிடக் கஷ்டமான காரியமெதுவும் கிடையாது. முதலில் பூநகரியூடாகவும்,

பின்னர் கொம்படி-ஊரியான் பாதையூடாக வும், அதையும் படையினர் கைப்பற்ற கிளாலிக் கடனீரேரி ஊடாகவுமே யாழ்ப் பாணத்தைக் கடக்க வேண்டி யிருந்தது. அதனால் யாழ். மாவட்ட எல்லையை விட்டு நீங்குவதற்கே ஒருநாள் தேவைப்படும்,. சில சமயங்களில் கிளாலிக் கடலில் புலிகளுக்கும் படையினருக்கும் சமர் நடந்தால் பயணத்தின் காலம் இன்னும் நீளும்.

பூநகரி, கொம்படியான் பாதைகள் ஓரளவுக்கு பாதுகாப் பானவை. எறிகணைத் தாக்குதல் நடத்தப்பட் டாலேயொழிய மற்றும்படி உயிரோடு யாழ்ப் பாணத்தைக் கடக்கலாம். ஆனால் கிளாலிக் கடனீரேரிப் பயணம் கரணம் தப்பினால் மரணம் தான். கொலைவெறியோடு திடீரெனச் சீறிக்கொண்டு வரும் கடற்படைப்படகுகள் சன்னதம் ஆடாமல் சென்றதில்லை. அந்தச் சன்னதத்தில் கடல் நீரேரி செந்நிறமாகும். உயிரற்ற உடலங்கள் அடுத்தநாள் அந்த இடமெங்கும் மிதக்கும். உயிரைப் பணயம் வைத்தே கிளாலிப் பயணத்தில் மக்கள் இறங்க வேண்டியிருந்தது.

கிளாலிக் கண்டத்தைத் தாண்டிவிட்டால், அடுத்த கண்டம் ஓமந்தையில் இருந்தது. அங்கு ஓரிரு நாள்கள் தவம் கிடந்தே தென்னிலங்கைக்குச் செல்வதற்கான அனுமதியைப் பெறமுடியும். அவ்வாறு அனுமதி பெறச் செல்லும் போது தலையாட்டிகளின் பார்வையில் இருந்து தப்ப வேண்டும். புலிகளோடு தொடர்புடையவர்களைக் காட்டிக் கொடுப்பவர்கள், தமது முகத்தை மறைத்தபடி சோதனைச் சாவடியில் இராணுவத்தினரோடு இருப்பார்கள்.

அவர்களே தலையாட்டிகள் . புலிகளோடு தொடர்புடையவர்கள் என அவர்கள் அடையாளம் காணுபவர்களைப் பார்த்து பலமாக அவர்கள் தலையசைத்து படையினருக்கு சமிக்ஞை கொடுப்பார்கள். அதனாலேயே காரணகாரியப் பெயராக தலையாட்டிகள் எனப்பட்டனர். ஓமந்தையில் தலையாட்டிகளின் கைங்கரியத்தால் காணாமல் போனோர் பட்டியலில் இணைந்தவர்கள் ஏராளம். அதனால் ஓமந்தை என்றவுடன் பலருக்கு பயத்தில் சிறுநீர் கூட வருவதுண்டு. அந்தளவுக்கு பயங்கரத்தின் குறியீடாக அது இருந்தது.

தலையாட்டிகளிடம் தப்பித்து, அனுமதி பெற்று கொழும்புக்கோ வவுனியாவுக்கோ சென்றவர்கள் கூட குறிப்பிட்ட சில தினங்கள் மாத்திரமே அங்கு நிற்க முடியும். ஓமந்தையில் கொடுக்கப்பட்ட 'விசா' முடியமுன்னர் மீண்டும் யாழ்ப்பாணத்துக்கோ வன்னிக்கோ சென்றுவிட வேண்டும்.

-------------------------

2001 இல் புரிந்துணர்வு ஒப்பந்தம் வந்த பின்னரும் கூட ஓமந்தை அதே இறுமாப்போடே இருந்தாலும் தலையாட்டிகள் இல்லாமல் போயினர். ஆயினும் சோதனைகளின் கெடுபிடி குறையவேயில்லை. புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் பகல் மட்டுமே சோதனைச் சாவடி திறக்கும். அதனால் இரவிரவாக வந்து , தவம் கிடந்து, விழுந்து சோதனைச் சாவடி திறக்கும் தருணத்துக்காக மக்கள் ஏங்கிக் கொண்டிருப்பார்கள். ஒரு நாட்டில் இருந்து இன்னொரு நாட்டுக்கு செல்லும் போது என்னென்ன நடைமுறைகள் கைக்கொ அத்தனையும் தவறாது ஓமந்தையில் பின்பற்றப்பட்டன. நீங்கள் வேற நாடு. நாங்கள் வேற நாடு என்பதைச் சொல்லும் குறியீடாக ஓமந்தை மாறியது இதனால் தான்.

---------------------

2009 இறுதிப்போரின் போதும் ஓமந்தை மீண்டும் பயங்கரத்தின் வடிவெடுத்தது. புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியில் இருந்து படையினரின் கட்டுப்பாட்டுக்குள் வந்தவர்கள் முள்ளிவாய்க்காலிலும், வட்டுவாகலிலும் முதலாவது களையெடுப்புச் செய்யப்பட்ட பின்னர் கொண்டு வந்து இறக்கிவிடப்பட்ட இடம் ஓமந்தைதான். போரின் வலியோடும், வயிற்றில் பசியோடும் காத்திருந்தவர்கள் இரண்டாவது களையெடுப்புக்கு உட்படுத்தப்பட்டனர்.

ஒலிபெருக்கி அறிவித்தல் மூலம்

**(22 ஆம் பக்கம் பார்க்க)**

# பவன் கல்யாணுக்கு ஜோடியான காஜல் அகர்வால்

திரையுலகின் பவர் ஸ்டார் நடிகர் பவன் கல்யாண் நீண்ட இடைவெளிக்கு பின்னர் நடித்து வரும் சர்தார் படத்தில் அவருக்கு ஜோடியாக நடிகை காஜல் அகர்வால் நடிக்கக் கூடும் என கூறப்பட்டது. காஜல் அகர்வால் சர்தார் படத்தில் நாயகியாக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது குறித்த அதிகாரபூர்வ அறிவிப்பு தற்போது வெளிவந்துள்ளது. நார்த் ஸ்டார் எண்டர்டையின்மெண்ட் பட நிறுவனம் தயாரிக்கும் இந்தப்படத்தை இயக்குநர் பாபி இயக்குகின்றார். இந்தப்படத்தில் பவன் கல்யாணுக்கு ஜோடியாக நடிகை அனிஷா அம்ரோஸ் நடிப்பதாக முதலில் அறிவிக்கப்பட்டது. ஆனால் திடீரென அனிஷா இந்தப்படத்திலிருந்து விலகிக் கொண்டார். இந்தநிலையில் தற்போது நடிகை காஜல் இந்தப்படத்தில் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.



# படப்பிடிப்பில் ஓடிப் போக நினைத்த அனுஷ்கா

இன்று தமிழ், தெலுங்கில் முன்னணி நடிகையாக இருக்கும் அனுஷ்கா, தான் அறிமுகமான முதல் படத்தின் படப்பிடிப்பில் இருந்துபாதியிலேயே ஓடிப் போக நினைத்தாராம். அனுஷ்கா நாயகியாக அறிமுகமான சூப்பர் படத்தின் படப்பிடிப்பு நடைபெற்ற போது ஒரு காட்சியில் நடிக்க அனுஷ்கா நிறைய மறுபதிப்பு வாங்கினாராம். நடனம் ஆட கொஞ்சம் கூட வராதாம். படத்தின் இயக்குநர் பூரி ஜெகன்னாத்தும், நாயகன் நாகார்ஜுனாவும் அதைக் கண்டு கோபப்படாமல் பொறுமையாக இருப்பார்களாம். ஒரு கட்டத்தில் அனுஷ்காவுக்கு கண்களில் கண்ணீரே வந்து விட்டதாம். அதோடு படப்பிடிப்பை விட்டு ஓடிப் போகலாம் என்றும் முடிவு செய்தாராம். ஆனால், நாகார்ஜுனாதான் அனுஷ்காவுக்கு தைரியமூட்டி, ஆதரவாக இருந்து தொடர்ந்து நடிக்கக் காரணமாக இருந்தாராம்.



# நயன்தாராவுடன் ஜெயம்ரவி நகைச்சுவை

இயக்குநர் மோகன்ராஜா இயக்கி வரும் தனி ஒருவன் படத்தில் நயன்தாரா ஆக்சன் ரோலில் நடிப்பதாக செய்திகள் வெளியாகி வருகின்றன. அதோடு, பட நாயகன் ஜெயம்ரவிக்கும், அவருக்குமிடையே சண்டைக் காட்சிகள் இருப்பதாகவும் கூறப்பட்டு வருகிறது. ஆனால், உண்மையில் அவர்களுக்கிடையே நகைச்சுவைக் காட்சிகள்தான் அதிகமாக இருப்பதாக அந்த படக்குழுவினர் கூறுகின்றனர்.

இதற்கு முன்பு நயன்தாரா எத்தனையோ இளவட்ட நடிகர்களுடன் நடித்திருந்தபோதும் இந்த படத்தில் ஜெயம்ரவியுடன் அதிக நகைச்சுவை காட்டி, நடித்திருப்பதாக சொல்கிறார்கள். அதோடு, ஜெயம்ரவியும் நயன்தாராவின் ரசிகர். அவருடன் ஒரு படத்திலேனும் நடித்து விட வேண்டும் என்பது அவரது நீண்டநாள் ஆசையாக இருந்து வந்தது. அதனால் அந்த ஆசையை தீர்த்துக்கொள்ளும் வகையில் இந்த படத்தில் அவரும் நகைச்சுவைக் காட்சிகளில் நயன்தாராவுக்கு ஈடுகொடுத்து நடித்துள்ளாராம். இதனால் இந்த படத்தில் அவர்களின் நகைச்சுவை பேசப்படும் வகையில் இருக்கும் என்கிறார்கள்.

# அஜித்தைத் தொடர்ந்து விஜய்

அஜித்தைப் பொறுத்தவரை படப்பிடிப்பு தளங்களில் தான் ஒரு முன்னணி நடிகர் என்ற கெடுபிடிகள் எதுவும் செய்யாதவர். குறி
தன்னையும் மற்ற நடிகர் நடிகைகளைப்போன்று கவனித்தாலே
எனக்கென்று விசேடமாக எதுவும் தேவையில்லை என்று
சொல்லக்கூடியவர். அத்தோடு, தனக்காக நிறுத்தப்பட்டிருக்கும்
ஓய்வறைக்குள் அலங்காரம் பண்ண போறதோடு சரி, மற்ற நேர
சக நடிகர், நடிகைகளுடன்தான் வெளியில் அமர்ந்து நகைச்சு
வையாகப் பேசிக்கொண்டிருப்பார். அவர்கள் நடிப்பதை ஒரு ரசி
போல் அமர்ந்து ரசிப்பார்.

ஆனால் இந்த விசயத்தில் இதுவரை விஜய் மாறுபட்டிருந்தார்.
வது பெரும்பாலும் அவர் வீட்டில் இருந்து படப்பிடிப்புக்கு வரும்
அவரது கார் ஓய்வறை இடத்துக்குச் சென்று அதன் வாசலருகே
நிற்கும். அதிலிருந்து இறங்கி, அப்படியே அவர் ஓ'யவறைக்குள்
சென்று விடுவார். அதன்பிறகு எப்போது இயக்குநர் அழைக்கிற
அப்போதுதான் மேக்கப் போட்டுக்கொண்டு வெளியில்
தலைகாட்டுவார். அதேபோல் கமரா முன்பு வந்து நடித்து முடித்
அப்படியே ஓய்வறைக்குள் சென்று விடுவார். இப்படித்தான் புலி
படத்துக்கு முன்பு வரை இருந்து வந்தார் விஜய்.

ஆனால் புலி படத்தில் நடித்து வந்தபோது விஜய்யின் நிலைமை
நிறைய மாற்றங்கள். அதாவது, ஓய்வறையை விட்டு வெளியே
வருபவர், பின்னர் தனக்கான படப்பிடிப்பு முடிந்த பிறகும் வெளி
ஸ்ரீதேவி, ஸ்ருதிஹாசன் அமர்ந்து பேசிக்கொண்டிருக்கும் இட
லேயே அமர்ந்து அவர்களுடன் பேசி வந்தவர், தம்பிராமையா
உள்ளிட்ட நகைச்சுவையாளர்களுடன் நிறைய நேரம் செலவிட்
கிறார். அதனால் இந்த படத்தில் அவர்களுக்கிடையிலான நகை
வைக் காட்சிகள் ரொம்ப இயல்பாக வந்திருக்கிறதாம். விஜய் த
களுடன் நிறைய நேரம் பேசிக்கொண்டிருந்ததை அந்தப்படத்தி
நடித்தவர்கள் பெருமையாக சொல்லிக்கொண்டு வருகிறார்கள்.

# ஷாமிலி விக்கிரம்

அஜித் மனைவி
இருவருமே குழ
தெலுங்கு, மலை
மொழி படங்களி
ராமநாராயணனி
மிகப்பெரிய வெ
2000ல் வெளியா
கொண்டேன் பட
கையாக ஷாமிலி
குழந்தை பருவ
நாயகியாக அறி
இப்போது தமிழ்
வைக்கிறார். விக்
நடிக்கிறார். தகர
இந்த படத்தில் வி



# ாமிலியுடன் ஜோடி சேரும் க்கிரம்பிரபு

த் மனைவி ஷாலினியின் தங்கை ஷாமிலி. அக்கான் தங்கை வருமே குழந்தை நட்சத்திரமாக 90களில் நடித்துள்ளனர்.தமிழ், ங்கு, மலையாளம், கன்னடம் என்று அனைத்து தென்னக ழி படங்களிலும், பேபி ஷாமிலியாக வந்து அசத்தினார்.
ாராயணனின் இயக்கத்தில் இவர் நடித்த துர்கா படம் பெரிய வெற்றி பெற்றது.
ல் வெளியான அஜீத்தின் கண்டு கொண்டேன் கண்டு ண்டேன் படத்தில் ஐஸ்வர்யாராய், தபு ஆகியோரின் தங் ாக ஷாமிலி நடித்தார்.
ந்தை பருவத்தை கடந்த பிறகு 2009ல் தெலுங்கு பட உலகில் ியாக அறிமுகமானார்.
போது தமிழ் பட உலகில் நாயகியாக அடியெடுத்து கிறார். விக்ரம்பிரபு அடுத்து வீர சிவாஜி என்ற படத்தில் கிறார். தகராறு பட இயக்குர் கணேஷ் வினாயக் இயக்கும் படத்தில் விக்ரம்பிரபு ஜோடியாக ஷாமிலி நடிக்க இருக்கிறார்.



# ஆஸ்கார் விருதுக்கு தயாராகும் காக்கா முட்டை

இந்தியாவில் இருந்து ஆஸ்கார் விருது போட்டிக்கு அனுப்பப்பட இருக்கும் படங்களின் தேர்வு நடந்து வருகிறது. பிரபல தயாரிப்பாளரும், இயக்குனருமான அமோல் பாலேக்கர் தலைமையிலான குழு இதற்கான படங்களை தேர்வு செய்து வருகிறது.
தென் இந்தியாவில் இருந்து பாகுபலி, காக்கா முட்டை ஆகிய படங்களை ஆஸ்கார் விருது போட்டிக்கு அனுப்ப முடிவு செய்துள்ளனர். தமிழில் காக்கா முட்டை படம் மட்டுமே தேர்வு ஆகி இருக்கிறது. படம் வெளிவரும் முன்பே 2 தேசிய விருதுகள் பெற்ற இந்தம படம் 2 சிறுவர்கள் வாழ்க்கையை யதார்த்தமாக சொல்லும். இந்த படத்தை இயக்கியவர் மணிகண்டன்.
இந்தியாவில் இருந்து ஆஸ்கார் விருது போட்டிக்கு அனுப்பப்பட இருக்கும் படங்களின் தேர்வு நடந்து வருகிறது. பிரபல தயாரிப்பாளரும், இயக்குனருமான அமோல் பாலேக்கர் தலைமையிலான குழு இதற்கான படங்களை தேர்வு செய்து வருகிறது.
தென் இந்தியாவில் இருந்து பாகுபலி, காக்கா முட்டை ஆகிய படங்களை ஆஸ்கார் விருது போட்டிக்கு அனுப்ப முடிவு செய்துள்ளனர். இதுபோல் அமீர்கானின் பிகே, பிரியாங்கா சோப்ரா நடித்த மேரி ஹோம், நீராஜின் மாஸான் உள்பட பல்வேறு மொழிகளில் மொத்தம் 45 இந்திய படங்கள் ஆஸ்கார் விருது போட்டிக்கு அனுப்ப தேர்வு செய்யப்பட்டுள்ளன. அதிகாரபூர்வ அறிவிப்பு அடுத்த மாதம் வெளியாகிறது.



ான் ஒரு
ருவர். குறிப்பாக,
ரித்தாலே போதும்
று
டிருக்கும்
ற்ற நேரங்களில்
நகைச்சு
் ஒரு ரசிகர்

ருந்தார். அதா
க்கு வரும்போது
சலருகேதான்
றைக்குள்
ழைக்கிறாரோ

து முடித்ததும்
தான் புலிப்

நிலையில்
வெளியே
ும் வெளியில்
தும் இடத்தி
மைய்யா
செலவிட்டிருக்
ான நகைச்சு
விஜய் தங்
ப்படத்தில்
றார்கள்.

# மீண்டும் நடிக்கும் நடிகை

நடிகை ஐஸ்வர்யாராய் திருமணத்துக்குப்பிறகு நடிப்பதை குறைத்தார். தற்போது நீண்ட இடைவெளிக்குப் பிறகு ஜாஸ்பா என்ற ஹிந்தி படம் மூலம் மீண்டும் நடிக்க வந்துள்ளார். இதன் படவேலைகள் விறுவிறுப்பாக நடக்கின்றன. ஒக்ரோபர் 9ஆந் திகதி படத்தை வெளியிட திட்டமிட்டு உள்ளனர்.
நான் 5 வருடங்களாக படங்களில் நடிக்கவில்லை. ஆனாலும், சினிமாவைவிட்டு ஒதுங்கிவிட்டதாக உணரவில்லை. ஏற்கனவே நடிகராக இருந்த ஒருவர் படங்களில் நடிக்காமல் இருந்தாலும், அவர் எப்போதுமே நடிகர்தான் என்று மூத்த நடிகர்கள் சொல்வதுண்டு. அது உண்மை என்பதை எனது அனுபவத்தில் உணர்ந்து இருக்கிறேன்.
நடிகர், நடிகையாக இருப்பவர்களுக்கு தங்கள் வேலையில் திருப்தி ஏற்படவேண்டும். அது ரொம்ப முக்கியம். திருமணத்துக்கு முன்பும் நடித்தேன், இப்போதும் நடித்துக்கொண்டு இருக்கிறேன். எப்போதும் அர்ப்பணிப்பு உணர்வோடுதான் எனது கடமையை செய்கிறேன். தாய் என்ற உறவிலும் உறுதியாக இருக்கிறேன். நல்ல கதைக்காக காத்து இருந்தேன். தற்போது நீண்ட இடைவெளிக்குப்பிறகு ஜாஸ்பா என்ற இந்தி படம் மூலம் மீண்டும் நடிக்க வந்துள்ளார்.
நல்ல கதைக்காக காத்து இருந்தேன். அந்த கதை இப்போது அமைந்து இருக்கிறது. இந்த படத்தில் சம்பளத்துக்கு பதில் லாபத்தில் பங்கு கேட்கிறீர்களா? என்று என்னிடம் கேட்கின்றனர். அதற்கு பதில் சொல்லமுடியாது. இவ்வாறு ஐஸ்வர்யாராய் கூறினார்.



# இளையவர்கள் ஒதுக்கும்
# பழைய சோற்றின் நன்மைகள்



பழைய சோறுதானே என்று ஒதுக்குபவர்களுக்கு அதில் மறைந்திருக்கும் நன்மைகள் பற்றி தெரிவதில்லை.

அப்படித் தெரிந்திருந்தால் அதை ஒதுக்கிப் பார்க்க மாட்டார்கள். மாறிவிட்ட சமூகத்தில் உணவு முறைகளும் முற்றிலும் வேறுவிதமாக மாறிவிட்டன. அத்தகைய உணவுகளை உண்ணும் போது பலவித பக்கவிளைவுகளும் வருகிறது.

ஆனால் நமது முன்னோர்கள் சாப்பிட்ட பழைய சோறு, அதற்கு தொட்டுக் கொள்ள வெங்காயம் இவை உடலில் பல பிரச்சனைகளை குணப்படுத்துகிறது.

பழைய சோற்றின் நன்மைகள்: -

1) பழைய சோற்றில், விற்றமீன் பி6 மற்றும் பி12 அதிகமாக உள்ளது. தவிர, சிறு குடலுக்கு நன்மை செய்யும் பாக்டீரியாக்கள் அதிக அளவில் இருக்கின்றன. இது நமது உணவுப் பாதையை ஆரோக்கியமாக்கும்.

2) பழைய சோற்றுடன் இரண்டு சிறிய வெங்காயம் சேர்த்து உண்டால், அபரிமிதமான நோய் எதிர்ப்பு சக்தி கிடைக்கிறது. காலை உணவாக இதை உண்டால், உடல் லேசாகவும், சுறுசுறுப்பாகவும் இருக்கும்.

3) சோற்றில் இரவிலே தண்ணீர் ஊற்றி வைப்பதால் இலட்சக்கணக்கான நல்ல பாக்டீரியாக்கள் உருவாகிறது. மறுநாள் இதை குடிப்பதால், உடல் சூட்டை தணிப்பதோடு குடல் புண், வயிற்று வலி போன்றவை குணமாகும்.

4) பழைய சோற்றில் நார்ச்சத்து இருப்பதால் மலச்சிக்கல் பிரச்சனையும் தீரும். மேலும், இரத்த அழுத்தம் கட்டுக்குள் வந்து, உடல் எடையும் குறையும். அதே போல் உடலுக்கு அதிகமான சக்தியை தந்து, உடலை சோர்வின்றி வைக்க உதவுகிறது.

5) அல்சர் உள்ளவர்கள் இதைச் சாப்பிட்டு வந்தால் மிக விரைவில் குணமாகிவிடும். நோய் எதிர்ப்பு சக்தி கிடைப்பதால், எந்த நோயும் வராமல் உடல் ஆரோக்கியமாகவும் இளமையாகவும் இருக்கும். அலர்ஜி, அரிப்பு போன்றவை கூடச் சரியாகி விடுகிறது.

6) பழைய சோற்றுக்கு சூடான சாதத்தில் தண்ணீர் ஊற்றக் கூடாது. ஆறிய பின்பு மண் சட்டியில் போட்டு தண்ணீர் ஊற்றி, மறுநாள் காலையில் சிறிது மோர் கலந்து சின்ன வெங்காயத்துடன் சாப்பிட்டால் பலவித நன்மைகளைப் பெறலாம்.

# நாக்கால் கண்களை தொட முடியுமா?


அமெரிக்காவில் பெண் ஒருவர் தனது நாக்கால் கண்களைத் தொட்டு காண்பவர்களை வியப்பில் ஆழ்த்தி வருகிறார்.

அமெரிக்காவைச் சேர்ந்தவர் அதிறிணி லூயிஸ் .

சிறுவயது முதலே இவரது நாக்கு சராசரி நீளத்தை விட அதிகமாக வளர்ச்சி பெற்று வருவதைக் கண்ட இவரது நண்பர்கள் இவரை கிண்டல் செய்து வந்துள்ளனர்.

சாதாரணமாக நாக்கால் மூக்கைத் தொடுவது என்பதே மிக அரிது. ஆனால், ஆட்ரியான்னா தனது நாக்கை வெளியே நீட்டி, மூக்கு மற்றும் உதட்டிற்கு கீழ் உள்ள தாடையை சர்வ சாதாரணமாக தொடுகிறார்.

இதையெல்லாம் விட, நாக்கை வெளியே நீட்டி கை விரல்களின் உதவியுடன் தனது கண்ணின் இமையை தொட்டு அனைவரை யும் வியக்க வைக்கிறார்.



# தனிமையை வெல்லுங்கள்

இன்றைய நவநாகரிக உலகில் ஒருவர் தனியாக இருப்பது என்பதே அதிசயம்தான். நமது வாழ்வில் ஒரு அங்கமாகவே மாறிவிட்ட 'ஃபேஸ்புக்', 'டுவிட்டர்' போன்ற சமூக இணையதளங்கள் 6 வயது குழந்தை முதல் 60 வயது முதியவர் வரை அனைவரையும் உலகத்தோடு பிணைத்து வைத்திருக்கிறது.

இப்படி இணையதள மோகத்தில் சிக்காதவர்கள் கூட, நண்பர்கள் அல்லது காதலன்/காதலி தனிமையை தொலைத்திருப்பார்கள்.

எனவே, இன்றைய சூழலில் ஒருவர் தனியாக இருக்கிறார் என்றால் அவர் தீராத மன வேதனையில் உள்ளார் என அர்த்தம். காதல் தோல்வி, ஏமாற்றம், துரோகம் என ஏதாவது ஒருவிதத்தில் பாதிக்கபட்டிருக்கும் இவர்கள், இனி யாரையும் நம்ப வேண்டாம். மற்றவர் களுடன் இருந்து காயப்படுவதைவிட தனியாக நிம்மதியுடன் இருப்பதே மேல் என்ற அளவிற்கு தீர்மானித்திருப்பார்கள்.

இந்த முடிவு நடைமுறைப்படுத்து வதற்கு மிகவும் கடினமான ஒன்று. எப்போதும் நண்பர்களுடன் இருந்து பழகியவர்களுக்கு தனியாக இருப்பது என்பது கண்ணைக் கட்டி காட்டில் விட்டது போல் இருக்கும். ஒரே நாளில் வாழ்க்கையே வெறுத்தது போல தோன்றும். இந்தச் சிக்கலான சூழலில் இருந்து வெளியே வர அதிக மன வலிமையும் சில எளிமையான ஆலோசனைகளும் தேவை... அந்த எளிமையான ஆலோசனைகள் இதோ...

தனிமையில் இனிமை - நமது அனைவரது வாழ்விலும் ஏதாவது ஒரு தருணத்தில் கண்டிப்பாகத் தனிமை அதன் சுயரூபத்தைக் காட்டும். தனியாக இருப்பது ஒரு பெரிய இழப்பல்ல என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். தனிமையாக இருக்கும் போது நீங்கள் உங்கள் வாழ்வை உங்களின் விருப்பத்திற்கு ஏற்ற விதத்தில் வாழலாம்.

**தனிமையைப் புரிந்துகொள்ளுங்கள்**

தனிமையில் இரண்டு வகை உள்ளது. ஒன்று நாமே நம் சந்தோஷத்திற்காக இருப்பது. மற்றொன்று மிக சோகமாக இருக்கும் சமயம் தனிமையில் வாடுவது. இந்த இரண்டாம் வகையான தனிமை படுத்தும் பாட்டை வார்த்தைகளால் . விவரிக்க இயலாது. அச்சமயம் நம்மைப் புரிந்து கொண்டவர்களிடம், நம்முடைய வேதனைகளை கொட்டித் தீர்ப்பதால் ஓரளவு அந்த தனிமையிலிருந்து விடுபடலாம்.

**தனிமையைப் புறக்கணியுங்கள்**

உங்களைப் போல் தனிமையில் வாடும் வேறு ஒருவரைக் கண்டால் அவரிடம், சாதாரணமாக பேச்சு கொடுங்கள். ஒரு எளிமையான அறிமுகத்திற்கு பின் நலம் விசாரியுங்கள். இப்படிச் செய்வதானால், உங்களின் புதிய நண்பரைத் தனிமையின் பிடியிலிருந்து விடுவித்திருப்பீர்கள். கொஞ்சம் நேரத்திற்கு உங்களைவிட்டும் தனிமை விலகியிருக்கும்.

**குடும்பம் கைகொடுக்கும்**

உங்கள் குடும்பத்தினரிடம் அதிக நேரம் செலவிடுங்கள். உங்களை அவர்களால் புரிந்துகொள்ள முடியாது என நீங்கள் எண்ணினாலும், உங்களுக்கு தேவையான அனைத்து சந்தோஷமும் உங்கள் குடும்பத்திலேயே இருக்கலாம்.


**தனிமையை வெல்லுங்கள்**

தனிமையை மறக்க முயற்சி செய்யுங் கள். சமூக நடவடிக்கைகளில் ஈடுபடுத்திக் கொள்ளுங்கள். சிறு வயதிலிருந்து உங்களை கவர்ந்த விஷயத்தைக் கற்றுக்கொள்ள முயற்சி செய்யுங்கள். உங்களுக்கு உபயோகப்படும் வகையில் பொழுதுபோக்கு விஷயங்களை மாற்றி அமையுங்கள்.

இவை அனைத்தையும் விட தனிமையை நொடி பொழுதில் களைய ஒரு வித்தியாசமான, சுவாரஸ்யமான முறை உடனடியாக ஒரு செல்லப் பிராணி வாங்குவதுதான்.

நாய், பூனை, பறவைகள் என எதுவாக இருந்தாலும் உங்களிடம் இருந்து அன்பு மற்றும் சிறிது அக்கறையை மட்டும் எதிர்பார்க்கும் இவை என்றும் உங்களை மீண்டும் தனிமையில் விடாது என்பது உறுதி.

# கவிதைப்புனல்



காதல் விநோதமானது; கவர்ச்சியானது. மாயமான முறையில் மனித குலத்தின் மீது நிழலாகப் பற்றிப் படர்ந்திருக்கிறது. பதற்றம், ஏக்கம், விழைவு, தவிப்பு, காத்திருப்பு, சீற்றம், கொந்தளிப்பு, கோபம், பயம், மயக்கம் எனப் பல்வேறு உணர்வு நிலைகளில் காதல் ஏற்படுத்தும் அனுபவங்கள் நுணுக்கமானவை. காதல் என்ற சொல்லுக்குள் புதைந்திருக்கும் பிரமாண்டமான ஆற்றல், சமூகத்தை உயிர்ப்புடன் இயங்கச் செய்கிறது.

புரதான மனிதனின் மூளையை இயக்கிய காதல் ஒருவகையில் சித்தப் பிரமைதான். சமூக வரலாற்றினைப் புரட்டிப் போடவும், வன்முறையாளரை அமைதிப்படுத்தவும், எளிய மனங்களை மனப் பிறழ்வுக்குள்ளாக்கவும், பேரரசை வீழ்த்திடவும்,



## காதல்... காதல்... காதல்...

### மன உளைச்சல் தரும் சொல்லா!

என் குழந்தைக்கு ஒரு கவிதை!
எதை எதையோ
சாதித்துவிடுகிறாய் நீ!
உன் ஒரே ஒரு அழுகையால்!
உன் அழுகையை ரசிப்பதற்கேனும்
அழவிடலாம் கொஞ்சநேரம்!

இப்பூவுலகில் உன்னைப்
பார்த்தவுடன் முடிவெடுத்துவிட்டேன்,
இனி வாழப்போவது
இந்தப் பூவுக்காகத் தான்!

எல்லா மொழிகளையும்
மறந்து விடுகிறேன்
உன் மழலை
மொழியின் சில வார்த்தைகளில்!

தத்தி தத்தி விழுகிறாய்,
விழுந்த பின் சிரிக்கிறாய்,
பின் எழுகிறாய்!
உன்னிடமிருந்து
உணர்ந்து கொண்டேன்,
விழுதலிலும், எழுதலிலும் இல்லை
சோகமும், சந்தோசமும்
எல்லாம் அவரவர் மனதினில்!

-யாரோ,



## உன் நினைவோடு...

ஆசை ஆசையாய்
நீ என்னைக் காதலித்த போது
உன் உண்மை அன்பை
புரிந்து கொள்ள
அன்றெனக்கு முடியவில்லை

இன்று என் இதயம்
சுமப்பது உன்னைத்தான்
உயிர் வாழும் வரை
உன்னவளாய் உன்னோடு
வாழ வேண்டும்
ஏங்கித் தவித்து
இதயமே அழுகிறது

உண்மைக்காதலின் சுவாசத்தை
உன்னைக் காதலித்த பின்பே
உண்மையாக சுவாசித்தேன்
காலத்தின் விளையாட்டில்-நாம்
காதல் இணையாது என்று
உயிரே நீ சொல்லிவிட்டாய்

நம் காதல் உண்மையானது
உன் அன்பான
நேசிப்பின் நினைவுகளோடு
தினம் தினம் வதை செய்யும்
வலிகளோடு
இணைந்திடமாட்டோமா?
என்ற இதயத்தின் ஏக்கத்துடன்
உன் நினைவோடு
வாழ்வின் நிமிடங்கள்
நகர்ந்து கொண்டிருக்கின்றன.

-இசையவள்,

## பெண்ணியம்

பெண்ணினம்
வீட்டுக்குள் அடங்கி
இருந்த காலம் மாறி
விண்ணுக்குக் கூட
நங்கையர் செல்லும்
காலமாகியது இன்று
தமக்கு எதிரான
கொடுமைகளை அழிக்க
பாரதியின் புதுமைப்
பெண்ணாக
இன்றே தயாராகு தோழி!
புதுயுக மங்கை
நீயென
உலகுக்கு புரிய
வைப்பாயாக!



-யசிந்தா,

(தொடர்ச்சி) ...முளையையும், ஆற்றல் மிக்க காதல் ஜீவ ஆறு போல எல்லாத் தேசங்களிலும் பொங்கியோடிக் கொண்டிருக்கிறது. பிரிவு- காத்திருத்தல் என்ற இரு வேறு ஆதார உணர்ச்சிகளின் வழியாகப் புனையப்படும் ஆண்-பெண் உறவின் அடிப்படையாகக் காதல் உள்ளது.

இளம்பெண்ணைப் பார்த்தவுடன் இளைஞன் ஒருவனின் மனதில் தோன்றும் ஏக்கமும், அதுபோல அந்தப்பெண்ணின் மனதில் தோன்றும் விருப்பமும் காதல் எனப் படுகிறது. ஆணோ பெண்ணோ, ஒருவர் மனதில் மட்டும் காதல் அரும்பினால் அது ஒருதலைக்காதல் எனப்படும். வன்முறையால் பெண்ணைக் கவர்ந்து சென்று அவளிடம் காதல் விருப்பத்தைத் தெரிவிப்பதைக் காதல் என்று சொல்ல வாய்ப்புண்டா? தெரியவில்லை.

காதல் என்ற ஒற்றைச் சொல்லின் அர்த்தம் விரிந்து கொண்டிருக்கும் இயல்புடையது. காதலுக்கு வயது பொருட்டல்ல. திருமணம், இலக்கு அல்ல. எல்லாக் கால கட்டங்களிலும் காதல் வயப்பட்ட மனநிலை வாய்ப்பது ஆணுக்கும் பெண்ணுக்கும் சாத்தியமே. உடலினால் ஆணாகவும், மனதினால் பெண்ணாகவும் வாழும் உயிருக்குச் சக ஆண் மீது ஏற்படும் காதல் உக்கிரமானது. பெண்ணுக்கும் பெண்ணுக்குமிடையில் தோன்றும் காதலும் வலுவானது. ஓர் இளம் பெண் ஒரே நேரத்தில் இரு இளைஞர்கள் மீது காதல் கொள்ளுதல், ஒரு இளைஞன் ஒரே நேரத்தில் இரு இளம்பெண்களைக் காதலிப்பது என நவீன வாழ்க்கையில் காதலின் முகங்கள் மாறிக் கொண்டிருக்கின்றன. காதல் வயப்பட்ட நிலையில் ஆணுக்கும் பெண்ணுக்குமிடையில், காமமும் காதலும் ஒருங்கிணைகின்றன. காமம் அற்ற காதல் மென்மைத் தனமானது. காதல் அற்ற காமம் வறட்டுத்தனமானது. மனித மனத்துக்கு மிகவும் நெருக்கமான காதல், காலந்தோறும் கவிஞர்களின் மனதில் சலனங்களை ஏற்படுத்திக் கொண்டேயிருக்கிறது. இதனால்தான் காதலிக்க முனையும் காதலர் நாளடைவில் கவிஞராக மாறுகின்றனர்.

இன்று 'காதல்' என்ற சொல் குறிப்பாக மாறிவிட்டது. சில வேளைகளில் அது காதலையும் குறிக்கின்றது. ஆண், பெண் பற்றிய சமூக மதிப்பீடுகளின் மாற்றம், ஊடகங்களின் பெருக்கத்தினால் வாடி வதங்கி தட்டையாகிவிடும் உடல்கள், குடும்பத்திலிருந்து மனரீதியில் வெளியேறிக் கொண்டி...

...பற்றிய கனவுகளைச் சிதைத்துக் கொண்டிருக்கின்றன.

நுகர்பொருள் பண்பாட்டுக்குப் பழக்கப் பட்டு விட்ட நிலையில், காதலுக்காக வீட்டை விட்டு வெளியேறிப் பொருளாதார நிலை யில் சிரமப்பட்டு வாழ்வது, காதலுக்காக உயிரைத் துறப்பது, காதலுக்காக கை நரம்பினை அறுத்துக் கொள்வது... ஒரு நிலையில் மடத்தனமாகிவிட்டது. காதலித்த பெண்ணைக் கைவிட்டுச் செல்லும் இளைஞன், தான் விரும்பிய பையனை அடைவதற்காகப் பொய்யாகப் புகார் சொல்லும் பெண் எனக் 'காதல்' தவித்துக் கொண்டிருக்கிறது.

அன்றாட நடப்பு வாழ்க்கையானது அலுவலகம், போக்குவரத்து, வீடு, சமையல், காத்திருத்தல் என விரியும் நிலையில், காதல் என்பது சமையல் எரிவாயு போலத் தீர்ந்து போகும் சாத்தியப்பாட்டினைக் கொண்டது என அறிஞர்கள் கூறுகின்றனர்.

வாழ்க்கைப் பரபரப்பில் ஒவ்வொருவரின் நெருங்கிய நண்பர்களும் காதலர்களும் காணாமல் போய்க் கொண்டிருக்கின்றனர். பதின்மப் பருவத்தில் மனதுக்குள் அடக்கி வைத்த காதல் உணர்வுகளுடன் கடந்து போன பட்டாம்பூச்சிகளின் எண்ணிக்கைக்குக் கணக்கேது? 'தொடுவானம்' போல தெரியும் கானல் வெளியில் நினைவின் வழியே பறக்கும் காதலுக்கு வயது, மரியாதை, பணம் என எதுவும் தேவை யில்லை.

காதல் என்ற சொல்லின் எதிரிணையாகக் 'கள்ளக்-காதல்' என்ற சொல்லைப் பிரயோகிப்பது வழக்கினில் உள்ளது. அன்பு வயப்பட்ட இரு உள்ளங்களுக்கிடையில் தோன்றும் பாலியல் சார்ந்த விழைவு என்பது காதல்தான். எனினும் குடும்பத்துக்கு வெளியே எதிர்பாலினரிடம் தோன்றும் விருப்பம் 'கள்ளக்காதல்' எனக் கேவலமாகப் பேசப்படுகிறது. எல்லா விதமான சமூகத் தடைகளையும் மீறி ஒத்த கருத்தும் அன்பும் மிக்க ஆணும் பெண்ணும் கொள்ளும் காதல் .

காதல் என்பது ஒருமுறை, ஒருவரிடம் மட்டும் ஏற்படும் புனிதமான உறவு'.

காதல் என்ற உணர்வு இயற்கையின் ஆகப்பெரிய தந்திரம். எல்லாவிதமான உபாயங்களையும் கபடங்களையும் செய்து இயற்கையானது, மனித குலம் தொடர்ந்து தழைப்பதற்குப் பாலியல் ஈடுபாடு அவசியம் என்ற நிலையில், விரும்பியோ விரும்பாமலோ காதல் என்ற பெயரில் ஆணும் பெண்ணும் எதிர்கொள்ளும் துக்கங்களும் கஷ்டங்களும் ஏராளம். அதையொட்டி உடல் ரீதியாகவும் சமூக ரீதியாகவும் ஏற்படும் வன்முறைகளும் கொடூரமானவை.

- கிரிக்கெட் வரலாற்றில் நீங்காத இடம் பிடித்திருக்கும் பிரட்மன், 1908ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27 ஆம் திகதி பிறந்தார்.
- 20 ஆண்டுகள் கிரிக்கெட் வாழ்க்கையில் இடம்பெற்றிருந்த பிரட்மன், 1948ம் ஆண்டு தனது கிரிக்கெட் வாழ்க்கையை முடித்தார்.
- இவர் 52 சர்வதேச போட்டிகளில் விளையாடி 6,996 ஓட்டங்கள் குவித்துள்ளார். 80 இன்னிங்ஸில் 10 போட்டிகளில் அவுட் ஆகாமல் இருந்தார்.
- பிரட்மன் 29 சதங்கள் விளாசியுள்ளார். அதில் இரண்டு முச்சதங்களும், 12 இரட்டை சதங்களும் ஆகும்.
- இவரது சராசரி 99.94 ஆக உள்ளது. இவருக்குப் பிறகு 50 போட்டிகளுக்கு மேல் விளையாடி எந்த வீரரும் 70 சராசரிக்கு மேல் எடுத்ததில்லை.






# 54 வயதில் கிரிக்கெட் விளையாடிய பிரட்மன்

கிரிக்கெட் உலகின் ஜாம்பவானாக திகழும் பிரட்மன் பற்றிய சில சுவாரஸ்யமான விடயங்கள் பற்றி பார்க்கலாம்.

1) பிரட்மன் தனது 12 வயதிலே பாடசாலைகளுக்கிடையிலான போட்டியில் சதம் அடித்துள்ளார். அந்தப் போட்டியில் 8 விக்கெட்டுகளையும் வீழ்த்தி வியக்க வைத்துள்ளார்.

2) தனது 12 வயதிலே தனது மனைவி ஜெசியை பிரட்மன் சந்தித்துள்ளார். அதுமட்டுமல்ல இருவரும் ஆரம்பத்தில் திருமணம் செய்து கொள்ளாமலே வாழ்ந்துள்ளனர்.

3) பிரட்மன் படிப்பில் கெட்டிக்காரர். அதிலும் கணிதத்தில் அவர் புலி. அவருக்கு பிடித்த விடயங்கள் இசை, கிரிக்கெட் மற்றும் கணிதம்.

4) இசை மீதான காதலால் அவர் பியானோ கற்றுக் கொண்டார். 7 வயதிலே மேடையில் பாடி அசத்தினார். பின்னர் 'Every Day is a Rainbow Day for Me' என்ற ஒரு பாடலை அவரே வெளியிட்டார். அதுமட்டுமல்ல தனது பியானோவிலே உருவான பட பாடல்களையும் அவர் வெளியிட்டார்.

5) கிரிக்கெட் தவிர டென்னிஸ், கோல்ஃப், ரக்பி, தடகளம் என அனைத்து விளையாட்டிலும் பட்டையை கிளப்பியிருக்கிறார் பிரட்மன்.

6) 20 வருட கிரிக்கெட் வாழ்க்கையில் அவர் விளையாடும் லெவனில் இருந்து ஒருமுறை தான் நீக்கப்பட்டுள்ளார். அதுவும் முதல் தொடரில் தனது 20 வயதில் நீக்கப்பட்டார். அதன் பிறகு அவர் இல்லாமல் ஆஸ்திரேலியா களமிறங்கியது இல்லை.


7) பதற்றத்தால் 90 ஓட்டங்களில் ஆட்டமிழக்கும் வீரர்கள் அதிகம். ஆனால் பிரட்மன் 90 ஓட்டங்களில் ஆட்டமிழந்தது கிடையாது.


8) ஆஸ்திரேலிய ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் பிரட்மனுக்கு மரியாதை செலுத்தும் விதமாக தனது தபால் பெட்டி எண்ணை 9994 என வைத்துள்ளது. 99.94 அவரது டெஸ்ட் சராசரி ஆகும்.

9) இவ்வளவு ஓட்டங்கள் அடித்த பிரட்மன் 6 சிக்சர்கள் மட்டுமே அடித்துள்ளார். ஐந்து இங்கிலாந்திற்கும் எதிராகவும், ஒன்று இந்தியாவிற்கு எதிராகவும் அடித்தார்.

10) கடைசியாக பிரட்மன் தனது 54 வயதில் கிரிக்கெட் விளையாடினார். எம்சிசி மற்றும் பிரதமர் லெவன் அணிக்கு எதிரான அந்தப் போட்டியில் விளையாடிய பிரட்மன் 4 ஓட்டங்கள் எடுத்தார்.

11) 2001ஆம் ஆண்டு பெப்ரவரி 25ம் திகதி உடல்நல குறைவால் சாதனை நாயகன் பிரட்மன் காலமானார்





- ஜனகா

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தல்.... பலத்த

துயரம் அளப்பரியது..தீர்த்து வைக்கப்பட வேண்டியதொன்று.

நிறுத்தியிருந்தது என்று தான் சொல்ல வேண்டும். இந்த நிலை மாற வேண்டும்.

ஆளுமையும்....திறமையும் கொண்ட சமூகத்தில் தங்களுக்கென்ற தனி அடையாளம் கொண்ட நிறைய பெண்கள் இருக்கின்றனர்.

நீதிபதிகளாக.....

சட்டத்தரணிகளாக....

வைத்தியர்களாக....

பொறியியலாளர்களாக...

நிறுவனத் தலைவர்களாக...

இன்னும்...இன்னும்...ஆளுமை மிக்க பெண்கள் நிறையப்பேர்.

கட்சித் தலைவர்கள் ஏன் அவர்களை நினைக்கவில்லையோ தெரியாது. நிறுத்தியிருந்தால்.... ஏழு ஆசனங்களில் ஒன்றை கூட இழந்திருக்க மாட்டார்கள்.

இனிவரும் காலங்களிலாவது பெண்களின் ஆளுமையை, திறமையை அரசியல் கட்சிகள் பயன்படுத்த வேண்டும். தயவு செய்து அவர்களின் இழப்புகளை மூலதனமாக்காதீர்கள்! திறமையை முதலிடுங்கள்! பெண்களின் பார்வையில் உல்கம் ரொம்பவே ரம்மியமானது.

அதே நேரம்....சகோதரிகளுக்கு

**ஆளுமை மிக்க பெண்களை ஏன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளராக முன்னிறுத்தவில்லை? அவர்கள் தாங்களாக கட்சியின் கதவை தட்ட வில்லை..... தட்டவும் மாட்டார்கள் தான்... ஆனால் கட்சித் தலைவர்கள் ஏன் அவர்களை நினைக்க வில்லையோ தெரியாது. நிறுத்தியிருந்தால்.... ஏழு ஆசனங்களில் ஒன்றை கூட இழந்திருக்க மாட் டார்கள்.**

எதிர்ப்புக்களுக்கு...... எதிர்பார்ப்புக்களுக்கு விடை தந்திருக்கின்றது. தமிழ் மக்கள் எந்தக் காலத்திலும் தாங்கள் கொண்ட கொள்கை மாறாதவர்கள் என்று மீண்டும் ஒரு முறை இலங்கை அரசாங்கத்துக்கும் சர்வதேசத்துக்கும் வெளிப்படுத்தியிருக்கின்றார்கள்.

அதற்காக அந்தத் துர்ப்பாக்கிய நிலைமையை வாக்குக்காக



# தமிழ்ப் பெண்களுக்கு அரசியலில் இடமில்லையா?

தமிழத் தேசியக் கூட்டமைப்பு பதினாறு ஆசனங்களை கைப்பற்றி ஆட்சியை தீர்மானிக்கும் தகுதியை பெருமையுடன் பெற்று நிற்கின்றது. அந்த பதினாறு பேரையும் வரிசையாக மனதில் நிறுத்தி பார்த்தால்....நிறையப் பெருமையாக இருக்கிறது.

ஆனால்......................

நிறைகுடத்துக்கு தேங்காய் வைக்காத மாதிரி பெரிய குறையும் இருக்கிறது.

அவர்களில் ஒருவர் மட்டுமே பெண்.(தேசியப் பட்டியலில் தான் ஒரு பெண் உள்வாங்கப் பட்டார் ) இது நிறைய ஐயப்பாடுகளுக்கு இடமளிக்கின்றது.

இது எதனால்?

தகுதி வாய்ந்த பெண் வேட்பாளர்கள் தமிழரிடையே இல்லாமல் போய்விட்டனரா?

தமிழ் பெண்களுக்கு அரசியலில் நாட்டம் இல்லாமல் இருக்கின்றதா?

தமிழ்க் கட்சிகள் திறமையும் ஆளுமையும் கொண்ட பெண்களுக்கு அரசியலில் தகுந்த அங்கீகாரத்தை தர மறுக்கின்றனவா?

அல்லது மேற்கூறிய மூன்று காரணங்களும் கலந்த காரணமா?

அடித்து பிடித்துக் கொண்டு உடனே அனந்தி....மதினி என்று பட்டியலிட வேண்டாம்.

அனந்தி என்ற பெண், மாகாண சபை வேட்பாளரானதற்கு அவர் மாவட்ட செயலகத்தில் தலைமை எழுது வினைஞராக சேவையாற்றியதோ....இல்லை ஆளுமையும் திறனும் கொண்ட பெண்ணாக் இனங்காணப்பட்டமையோ காரணமல்ல....,கடைசி யுத்தத்தில் கணவனைத் தொலைத்தமை மட்டுமே காரணம்.

அனந்தியினதும் அவரைப் போன்ற மற்றப் பெண்களினதும்

பயன்படுத்தி கண்ட வெற்றி வெற்றியே அல்ல. தனி நபர் ஆளுமையின்றிய ஒருவரை வெறும் அனுதாப வாக்குக்களால் தேர்தலில் வெற்றி பெறச் செய்து...வெற்றி பெற்றதும் அவர் எடுப்பார் கைப்பிள்ளையாகி கட்சிக்குள் முரண் பட்டதும்... ஒப்பாரி வைக்க வெளிநாடுகள் சென்றதும் தான் மிச்சம். அது தான் அவர் பாராளுமன்றத் தேர்தலில் புறக்கணிக்கப் பட்டதற்கு காரணமாகவும் இருக்கலாம்.

இந்த முறை நாடாளுமன்றத் தேர்தலில் பெண்களை நிறுத்த வேண்டும் என்ற ஒரே காரணத்துக்காக....... தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெயருக்காக சிலரை

(தயவு செய்து பெண்ணியவாதிகளாக தங்களை அடையாளப்படுத்தும் அரை வேக்காடுகளை நினைக்கக் கூட வேண்டாம்...கொடி பிடித்து ஊர்வலம் போக மட்டும் அணுகலாம் )

**தமிழ் மக்கள் எந்தக் காலத்திலும் தாங்கள் கொண்ட கொள்கை மாறாதவர் கள் என்று மீண்டும் ஒரு முறை இலங்கை அரசாங்கத்துக்கும் சர்வதேசத்துக்கும் வெளிப்படுத்தியிருக்கின்றார்கள்.**

இப்படியான ஆளுமை மிக்க பெண்களை ஏன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளராக முன்னிறுத்தவில்லை? அவர்கள் தாங்களாக கட்சியின் கதவை தட்டவில்லை..... தட்டவும் மாட்டார்கள் தான்... ஆனால்

அன்பான வேண்டுகோள்!

அரசியல் என்பது தென்னிந்திய சினிமாக்களில் தான் சாக்கடையாக காட்டப்படுகின்றது.... இலங்கையில் இப்போது அவ்வளவு மோசமல்ல.. எனவே அரசியல் பக்கம் உங்கள் அடிகளை தாராளமாக வைக்கலாம். உங்கள் அரசியல் சார்ந்த அறிவை வளர்த்துக் கொள்ளுங்கள். நிறைய வாசியுங்கள்.. தெரியாததை தேடுங்கள்... கேளுங்கள்.... அரசியல் சார் கூட்டங்களுக்கு அழையா விருந்தாளிகளாக வென்றாலும் செல்லுங்கள் ... அடுத்து வரும் தேர்தலில் உரிமையுடன் கட்சிகளிடம் கோரிக்கை வையுங்கள். கனவு பலிக்கும்!

# கணவன் - மனைவி உறவு மகத்துவம்



வாழ்கையில் கணவன் மனைவி உறவு என்பது மிகவும் உன்னதமானது. வாழ்க்கை பாதையை சீரமைக்கும் ஒரு கருவி தான் அன்பு.வாழ்வை அர்த்தமுள்ளதாக மாற்றும் வல்லமை அன்பிடம் மட்டுமே உள்ளது. இந்த உன்னதமான உணர்வுகள் தான் நம் வாழ்வையேஅர்த்தமுள்ளதாக மாற்றக்கூடியவை.

அன்பால் மலரும் உணர்வுகளே குடும்பத்தை வழிநடத்திச் செல்லும் என்பதை கணவன்- மனைவி உணர வேண்டும். அன்பைவெளிபடுத்தவே திருமணம் நம்மை இணைத்துள்ளது என்று எண்ண வேண்டும். மனிதர்கள் உணர்வுகளுக்குக் கட்டுபட்டவர்கள். அதனால் பலநேரங்களில் தவறு செய்யக் கூடும்.ஆனால், அத்தகைய தவறுகள் அன்பினால் சீரமைக்கப்பட வேண்டும். 'என்னை நல்லபடியாக வைத்துக் கொள்ளும் அன்பு உன்னிடம் இருந்து நிச்சயம் கிடைக்கும்' என்ற எண்ணம் தம்பதிகள் இருவரிடம் வாழ்நாள் முழுவதும் நீடிக்க வேண்டும்.

நல்ல விஷயங்களின் அடிப்படையில்உருவாக்கப்படும் கூட்டுத் தொகுப்பே குடும்பம்.நமக்கு நேர்மை அவசியம். என் சிந்தனை உட்பட எனது ஒவ்வொரு வார்த்தையும், செயலும் உண்மை. அதை உன்னோடு பகிர்ந்துகொள்வேன்.

என் நோக்கம். இயல்பான முறையில் நீண்ட நாள் உறவை பேணுவது தான் என்று இருவரும் எண்ண வேண்டும்.நேர்மை இல்லாத குடும்பம் தண்டவாளத்தில் ஓடாத ரயில் போன்றது. நேர்மை தான் குடும்பத்தின் முதுகெலும்பு என்பதை உணர்ந்து கணவர் மனைவி இருவரும் பரஸ்பர அன்பை பகிர்ந்து கொள்ள வேண்டும்.

# மோர் இட்லி..



### தேவையான பொருட்கள்

- இட்லி மாவு - 2 கப்
- கெட்டியாக கடைந்த மோர் - 2 கப்,
- மோர் மிளகாய் - 7,
- சிவப்பு மிளகாய் - 2,
- வெந்தயம் - ஒரு கோப்பை,
- கறிவேப்பிலை - ஒரு கைப்பிடி
- எண்ணெய், உப்பு - தேவையானது.


### செய்முறை

- இட்லி மாவை சிறிய இட்லிகளாகவோ, அளவான இட்லிகளாகவோ வேக வைத்து எடுக்கவும். பெரிய இட்லிகளாக இருந்தால் சம அளவில் வெட்டிக் கொள்ளவும்.
- மோரில் மூன்றில் இரண்டு பங்கு எடுத்து… தாளித்த வெந்தயம், உப்பு ஆகியவற்றை அதனுடன் சேர்த்து, வறுத்த சிவப்பு மிளகாயை நறுக்கிப் போட்டு, நன்கு கலந்து வைக்கவும்.
- மோர் மிளகாயைத் தனியாக வறுத்து வைத்துக் கொள்ளவும்.
- மீதியுள்ள ஒரு பங்கு மோரில் சிறிதளவு நீர் விட்டு கலந்து, சூடான இட்லிகளை அதில் போட்டெடுத்து, பெரிய தாம்பாளத்தில் பரத்தி வைக்கவும்.
- தாளித்து வைத்த கெட்டி மோரில், வறுத்த மோர் மிளகாயை நறுக்கிப் போடவும். இட்லிகள் மீது இந்த மோர் கலவையை விட்டு, கறிவேப்பிலையைத் தூவி, தட்டில் , கரண்டி வைத்து சாப்பிடக் கொடுக்கவும்.

## தந்தை பெரியார்





- பிறர் உங்களிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்களோ அவ்வாறே நீங்கள் மற்றவர்களிடம் நடந்து கொள்வதே ஒழுக்க நெறியாகும்.
- படிப்பு எதற்கு? அறிவுக்கு. அறிவு எதற்கு? மனிதன் மனிதத் தன்மையோடு வாழ்ந்து மற்ற மனிதனுக்கு உதவியாய் - தொல்லை கொடுக்காதவனாய் -நாணயமாய் வாழ்வதற்கு. கல்வி என்பது ஒரு மனிதனுக்குக் கற்பிக்கப்பட வேண்டிய அவசியமெல்லாம் அவன் தன் வாழ்நாளில் சுதந்திரத் தோடு வாழ்வதற்குத் தகுதிப்படுத்தவே.
- மனிதனுக்கு உள்ள பண ஆசையும், பதவி ஆசையும் எப்படிப்பட்டவனையும் கெடுத்து, ஒழுக்கமற்ற காரியங்களைச் செய்யத் தூண்டுகின்றன.
- பொதுவுடைமை வேறு, பொது உரிமை வேறு. பொதுவுடைமை என்பது சமபங்கு என்பதாகும். பொது உரிமை, என்பது சம அனுபவம் (சமவாய்ப்பு) என்பதாகும்.
- கல்வி அறிவும், சுயமரியாதை எண்ணமும், பகுத்தறிவுத் தன்மையுமே தாழ்ந்து கிடக்கும் மக்களை உயர்த்தும்.
- அறிவுக்கும் அனுபவத்துக்கும் ஒத்து வராததை பயத்தால் நம்புகிறவன் பக்குவமடைந்த மனிதனில்லை.
- பகுத்தறிவுக்கும் தன்மானத்துக்கும் முரண்பட்ட எதையும் நீக்க வேண்டும்
- மனிதனின் கடவுள் உணர்ச்சி மாறிமாறித்தான் அறிவு வளர்ச்சியடைகிறது.



# நரம்புகள் பலம் பெற..

- 100 கிராம் வெங்காயத்தை நன்றாக வதக்கி காலையில் வெறும் வயிற்றில் சாப்பிட்டு வந்தால் நரம்புத்தளர்ச்சி குணமாகும். மதியம் தயிரில் ஒரு பெரிய வெங்காயம் சேர்க்க வேண்டும். 15 நாள்கள் இதைக் கடைப்பிடிக்கவும்.
- குண்டாக இருப்பவர்கள் வெங்காயச்சாறு வெறும் வயிற்றில் அருந்த இதயக்கோளாறை முன்கூட்டியே தடுக்கலாம். 100 கிராம் வெங்காயம் போதும்.
- 30 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் பச்சை வெங்காயத்தைத் தயிரோடு சேர்த்து உண்டால் எலும்பு மெலிவு நோய் தடுக்கப்படும்.



## இவ்வார இராசி பலன்

**02.09.2015 –08.09.2015**

### மேஷம்

**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**

மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். திட்டமிட்டபடி, புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். உறவினர்களிடம் இருந்த கருத்து வேறுபாடு மறையும். வீடு, வாகனத்தில் பராமரிப்புச் செலவு ஏற்படும். புத்திரர்களின் செயல்பாடு கண்டு பெருமை கொள்வீர்கள். மனைவியின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் படி படியாக உயரும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கப் பெறுவர். பெண்கள் ம ம் போல ஆடை, ஆபரணம் வாங்குவர். மாணவர்கள் படிப்பில் மட்டும் கவனம் செலுத்துவ து நல்லது.

### ரிஷபம்

**கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ம் பாதங்கள்**

தடை நீங்கி முன்னேற்றம் வாழ்வில் உருவாகும். கடந்தகால உழைப்பின் பயனைத் தற்போது அனுபவிப்பீர்கள். குடும்பத்தினர் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள். நண்பர்களுடன் சுற்றுலா செல்ல வாய்ப்புண்டு. புத்திரருடன் கருத்து பதம் ஏற்படலாம் கவனம். மனைவியின் ஆலோசனையை ஏற்பது முன்னேற்றத்திற்கு வழி குக்கும். தொழில், வியாபாரத்தில் நல்ல லாபம் கிடைக்கும். பணியாளர்கள் சுறுசுறுப்பாகச் செயல்பட்டு பணி இலக்கை எட்டிப் பிடிப்பர்.

### மிதுனம்

**மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

புத்திரர், உங்கள் சொல்லுக்கு கட்டுப்பட்டு நடப்பர். மறைமுக எதிரிகள் இருந்த இடம் தெரியாமல் விலகிச் செல்வர். மனைவியின் அன்பைக் கண்டு மனம் மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் நிர்வாகச் சீர்திருத்தத்தில் ஈடுபடுவீர்கள். பணியாளர்களுக்கு விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும். பெண்களுக்கு சமூகத்தில் மரியாதை கூடும். மாணவர்கள் பெற்றோரின் மனம் மகிழும் விதத்தில் படிப்பர்.

### கடகம்

**புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயில்யம்**

புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும். வீடு, வாகனத்தில் உரிய பாதுகாப்பு நடைமுறையைப் பின்பற்றுவது நல்லது. தாயின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள். நல்லவர்களின் அன்பும், ஆசியும் கிடைக்கும். புத்திரரின் செயல்பாட்டை த்க்க அறிவுரை கூறி நல்வழிப்படுத்துவீர்கள். ஒவ்வாத உணவுகளை தவிர்ப்பது நல்லது. மனைவியின் கருத்துக்கு மதிப்பு அளிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் மிதமான லாபம் கிடைக்கும்.

### சிம்மம்

**மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்**

தான, தர்மத்தில் மனம் ஈடுபடும். வெளியூர் பயணம் பயனறிந்து மேற்கொள்வது நல்லது. புத்திரர்களின் செயல்பாடு கண்டு மனம் மகிழ்வீர்கள். மறைமுக எதிரிகளின் தொல்லை மறையும். மனைவி விரும்பிய பொருட்களை வாங்கித் தருவீர்கள். பணியாளர்கள் பணிச்சுமையில் இருந்து விடுபடுவர். பெண்கள் பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்வர்.

### கன்னி

**உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம் 1, 2 ஆம் பாதங்கள்**

உறவினர்களிடம் கருத்து வேறுபாடு மறைந்து நிம்மதி பிறக்கும். குடும்பத்தில், சுப விஷயம் குறித்த பேச்சு அடிக்கடி நடந்தேறும். வாகனத்தில் மிதவேகத்தைக் கடைபிடிப்பது நல்லது. புத்திரரின் வளர்ச்சிக்குத் துணைபுரிவீர்கள். பணியாளர் விண்ணப்பித்த கடனுதவி பெறுவதில் தாமதம் உண்டாகும். பெண்கள் உறவினர்களுடன் சுற்றுலா செல்வர். மாணவர்கள் படிப்பில் சாதனை படைக்க முயல்வர்.

### துலாம்

**சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

அரசு சார்ந்த நன்மை பெறுவீர்கள். புத்திரரின் எதிர்கால நலனுக்காக முயற்சியில் ஈடுபடுவீர்கள். உடல்நிலை ஆரோக்கியமாக இருக்கும். மனைவி வழி உறவினர்களுடன் நெருக்கம் உண்டாகும். தொழில், வியாபாரத்தில் நல்ல வளர்ச்சியும், ஆதாயமும் உண்டாகும். பணியாளர்கள், பணி விஷயமாக அடிக்கடி வெளியூர் செல்ல நேரிடும். பெண்கள் அடிக்கடி விருந்து, விழாவில் பங்கேற்று மகிழ்வர். மாணவர்கள் படிப்பில் சிறந்து விளங்குவர்.

### விருச்சிகம்

**விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

மற்றவர் குடும்ப விஷயத்தில் கருத்து சொல்ல வேண்டாம். வீடு, வாகன பாதுகாப்பில் கவனம் தேவை. புத்திரர்கள், உங்களின் சொல்லுக்கு மதிப்பு கொடுப்பர். எதிரிகள் பலமிழந்து போவர். மனைவியின் கவனக்குறைவால் சிரமத்திற்கு ஆளாக நேரிடும். தொழில், வியாபாரத்தில் மூலதனத்தை அதிகப்படுத்துவீர்கள். பணியாளர்கள் நிர்வாகத்தினரின் நன்மதிப்பை பெறுவர். பெண்கள் குடும்ப நலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள் போட்டிகளில் பங்கேற்று வெற்றி காண்பர்.

### தனுசு

**மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்**

உடன்பிறந்தவர்களின் உதவி கிடைக்கும். வாகன பயணத்தின் மூலம், இனிய அனுபவம் காண்பீர்கள். புத்திரரின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள். விருந்து, விழாவில் அடிக்கடி கலந்து கொள்வீர்கள். மனைவி வழி உறவினர்களுடன் இணக்கம் அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் படிப்படியாக லாபம் உயரும். பணியாளர்களுக்கு எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். பெண்கள் நிம்மதியான வாழ்வு நடத்துவர். மாணவர்கள் கல்வியில் மேம்படுவர்.

### மகரம்

**திருவோணம், அவிட்டம்1,2ஆம்பாதங்கள்**

கடந்த கால நற்செயலுக்கு, உரிய பலன் தேடி வரும். வாகனப் போக்குவரத்தில் மிதவேகம் கடைபிடிப்பது நல்லது. புத்திரர் படிப்பு, வேலையில் நல்ல முன்னேற்றம் காண்பர். எதிர்ப்பாளரின் கெடு செயல் பலமிழக்கும். மனைவியின் ஆலோசனை வளர்ச்சிக்கு துணைநிற்கும். தொழிலில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். பணியாளர்களுக்கு சம்பள உயர்வு கிடைக்கும். பெண்கள் குழந்தைகளின் வளர்ச்சி கண்டு மகிழ்வர்.

### கும்பம்

**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள்**

பணிகளில் நேர்த்தி மிகுந்திருக்கும். புதியவர்களின் அறிமுகத்தால் நன்மை காண்பீர்கள். வீட்டுத்தேவைகளை ஆடம்பர முறையில் நிறைவேற்றுவீர்கள். புத்திரர்களின் செயல்பாடு கண்டு பெருமிதம் கொள்வீர்கள். ஆரோக்கியம் பலம் பெறும். மனைவியின் கருத்துக்கு மதிப்பளிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் போட்டி குறைவதால், லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் புதிய தொழில் நுட்பங்களை ஆர்வமுடன் கற்பர்.

### மீனம்

**பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

குடும்பச் செலவுக்காக கடன் வாங்க நேரிடும். வெளியூர் பயணம் பயன் அறிந்து மேற்கொள்வது நல்லது. மனைவியின் செயல்பாடு நிம்மதிக்கு வழிவகுக்கும். தொழில், வியாபாரத்தில் மிதமான லாபம் கிடைக்கும். பணியாளர் பணிச்சுமைக்கு ஆளாவர். பெண்கள் அடுத்தவர் குடும்ப விஷயத்தில் தலையிடுவதை தவிர்க்கவும். மாணவர்கள் படிக்கும் நேரத்தை அதிகப்படுத்துவர்.

# சுதந்திர வேட்கை

## விடுதலைப் போராட்டம் பற்றிய ஒரு பதிவு 101

அடேல் பாலசிங்கம்



வடக்கும், கிழக்கும் ஒன்றானது; இணைந்தது; தமிழ் மக்களின் தாயகம்; இந்த ஐக்கிய ஒன்றிணைவை ஒப்பந்தத்தில் கூறுவது போல கருத்து வாக்கெடுப்புக்கு விடுவது அநியாயமானது; ஏற்கமுடியாதது என்றும் அவர்கள் வ தாடினார்கள். ஜெயவர்த்தனாவைத் தமிழ் மக்கள் நம்பவில்லை என்றும் ஒரு போதும் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை அங்கீகரிக்க மாட்டார் என்றும் ரஜீவ் காந்திக்கு அவர்கள் விளக்கி உரைத்தார்கள். அதே சமயம் ஒப்பந்தம் கூறும் வடிவம் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு முன்னதாக, ஒப்பந்தத்தில் கூறப்பட்டவாறு அது கைச்சாத்தான எழுபத்தியிரண்டு மணி நேரத்துக்குள் தமிழ் விடுதலை அமைப்புக்களின் ஆயுதங்களை களைய வேண்டும் என்ற கோரிக்கையானது ஒரு பெரிய தவறு என்றும் இந்தியத் தலைவருக்கு விளங்கப்படுத்தப்பட்டது. ஒப்பந்தத்தின் உள்ளடக்கம் அவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட முடியாதது என்ற போதிலும் அதை அவர்கள் எதிர்க்கக் கூடாது என்று ரஜீவ் வலியுறுத்தினார். வட கிழக்கில் இடைக்கால நிர்வாக அரசு ஒன்றை குறைந்த அதிகாரங்களோடு விடுதலைப்புலிகளுக்கு வழங்குவதாகவும் உறுதியளித்தார். ரஜீவின் யோசனை மட்டில் பிரபாகரனுக்கு நம்பிக்கை இல்லை என்றும், இந்திய அரசுடன் மோதலைத் தவிர்க்கும் பொருட்டு ரஜீவின் திட்டத்துக்கு தாங்கள் சம்மதித்ததாகவும் பாலா என்னிடம் கூறினார். புதுடில்லியில் இடம்பெற்ற நிகழ்வுகள் தொடர்பாகப் பிரபாகரன் அவர்களுக்குத் திருப்தி இல்லை. சென்னையில் உள்ள எமது வீட்டுக்கு அவர் வந்த போது, அவருடைய போராளிகள் அவரைச் சூழ்ந்து கொண்டார்கள். கொழும்புக்கும் புதுடில்லிக்கும் இடையிலான ஒப்பந்தத்தின் உள்ளடக்கமானது போராட்டத்தை எவ்வாறு பாதிக்கப் போகிறது என்பதை அறிய பதகளிப்போடு போராளிகள் இருந்தார்கள், தம் மட்டில் இந்திய அதிகாரிகள் அடாவடித்தனமாகவும் ,அராஜகத்துடனும் நடந்து கொண்டதாகக் கருதிய பாலாவும் ,பிரபாகரனும் கடுப்புடன் இருந்தார்கள். ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்பட்ட காலம் முழுவதும் இதே உணர்வே அவர்களிடம் மேவி நின்றது. டிக்சிற் அவர்களை ஒரு புத்திசாதூரிய இராஜதந்திரியாகப் பலர் கருதிய போதும் , விடுதலைப்புலிகளின் தலைமை அவரைக் குரூபியாகவும் , கபடதாரியாகவும் நம்பிக்கைக்கு அருகதையற்றவர் என்றுமே கருதியது. இந்த ஒப்பந்தத்தை தயாரிக்கும் போது தமிழ் மக்களை இது எவ்வளவு தூரத்துக்குப் பாதிக்கும் என்பது கவனத்துக்கு எடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஒப்பந்தம் தொடர்பாகத் தெளிவாகவும், விரிவாகவும் விவாதிப்பதற்கு அவர்களுக்கு போதிய காலமும், இடைவெளியும் வழங்கப்பட்டிருக்க வேண்டும். இவற்றை எல்லாம் புறம் தள்ளி , புதுடில்லியில் விடுதலைப்புலித் தலைவர்கள் மிகவும் கீழ்த்தரமாக நடத்தப்பட்டமை வியப்பையே தருகிறது. இந்த வரலாற்று முக்கியம் பெற்ற நிகழ்வு தொடர்பாக புரிந்து கொள்ள வேண்டிய விடயம் என்ன வென்றால், விடுதலைப்புலிகள் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவில்லை என்பதும், அது உருவாக்கப்பட்ட போது அவர்கள் புறம் தள்ளப்பட்டார்கள் என்பதுமாகும்.

(பதிவு தொடரும்)



# புத்திசாலித்தனம்

ஓர் ஊரில் ஒரு கப்பல் வியாபாரி இருந்தார். அவரிடம் இருந்த ஒரு பெரிய கப்பல் பழுதாகி விட்டது. ஊரில் உள்ள பெரிய பெரிய இயந்திரம் திருத்துபவர்கள் எல்லோரையும் வரவழைத்து கப்பலின் பழுதைச் சரி செய்யச் சொன்னார். ஆனால் யாராலும் அந்தக் கப்பலில் என்ன பழுது என்று கண்டுபிடிக்க முடியவில்லை. ஒரு வயதான இயந்திரம்திருத்துனர் தான் அதை பழுது பார்த்து தருவதாகச் சொன்னார். அதற்கு கப்பல் வியாபாரியும் சரி என்று ஒப்புக் கொண்டார். அந்த இயந்திரம்திருத்துனர் பெரிய பையில் பழுது பார்க்கும் பல கருவிகள், கப்பல் இயத்திரத்தின் உதிரி பாகங்கள் எல்லாம் வைத்து இருந்தார்.

கப்பல் வியாபாரிக்கு வயதான இயந்திரம்திருத்துனர் எப்படியும் கப்பலின் பழுதைச் சரி செய்து விடுவார் என்கிற நம்பிக்கை வந்து விட்டது.

அந்த வயதான இயந்திரம்திருத்துனர் கப்பலின் இயந்திரத்தை நான்கு பக்கமும் சுற்றி வந்து பார்த்தார். பிறகு தன் பையில் இருந்து சுத்தியை எடுத்து ஒரு இடத்தில் ஓங்கி அடித்தார். பின்னர் கப்பலின் இயந்திரத்தை இயக்கிப் பார்த்தார். இயந்திரம் வேலை செய்யத் தொடங்கி விட்டது.

கப்பல் வியாபரி அந்த இயந்திரம்திருத்துனரிடம் பழுது நீக்கியதற்கு எவ்வளவு பணம் வேண்டும்? என்று கேட்டார்.

அந்த இயந்திரம்திருத்துனர் அவரிடம், நாளை என் கடையில் வேலை செய்யும் பையனிடம் எனது பழுது நீக்கத்துக்கான சிட்டையைக் கொடுத்து அனுப்புகிறேன் என்று சொல்லிவிட்டுக் கிளம்பிவிட்டார்.

மறுநாள் அந்த இயந்திரம்திருத்துனரின் வேலைத்தளத்தில் வேலை செய்யும் பையன் இயந்திரம்திருத்துனர் கொடுத்த சிட்டையைக் கொண்டு வந்து கொடுத்தான். அதைப் பார்த்த கப்பல் வியாபாரி அதிர்ச்சி அடைந்தார். அதில் பழுது நீக்கத்துக்கான கூலி ஐம்பதாயிரம் ரூபாய் என்று இருந்தது. இதைக் கண்ட அவர் அந்த பையனிடம் இந்த சிட்டையில் மொத்தத் தொகை மட்டும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. என்ன என்ன செலவு என்று உங்கள் முதலாளியிடம் பிரித்துப் போட்டு வாங்கிக் கொண்டு வா என்று சொல்லி அனுப்பி வைத்தார். மறுநாள் அந்தப் பையன் கொண்டு வந்து கொடுத்த பில்லைப் பார்த்தார் கப்பல் வியாபாரி. அதில்:

1 - கப்பலின் இயந்திரம் பழுது நீக்கத்துக்காகச் சுத்தியலால் அடித்த கூலி- ரூ. 25

2- இயந்திரத்தின் பழுது நீக்க எங்கு சுத்தியலால் அடிக்க வேண்டும் என்று கண்டறிந்த கூலி - ரூ. 49,975

ஆக மொத்தம் - ரூ. 50,000

என்று எழுதி இருந்தது.

கப்பல் வியாபாரியும் இயந்திரம்திருத்துனரின் புத்திசாலித்தனத்தை அறிந்து அவர் கொடுத்த சிட்டைக்கான தொகையைக் கொடுத்தனுப்பினார்.



# சிறுவர் உலகம்

தந்தை:-மகனே பரீட்சையில் எத்தனை கேள்வி வந்தது?

மகன்:-ஐந்து கேள்வியப்பா.

தந்தை:-நீ எத்தனை கேள்விக்கு விடை எழுதவில்லை?

மகன்:-முதல் மூன்றும் கடைசி இரண்டும்.

தந்தை: - மிகவும் நல்லது மகனே!



## துணுக்குகள்

# வர்ணம் தீட்டலாம்





இந்த இரு படங் களுக்கு இடையே உள்ள வித்தியா சங்களைக் கண்டு பிடியுங்கள்.

## நோயின்றி வாழ...

காலையில் எழுந்திடு
காலாற நடந்திடு
தூய்மைக் காற்றினை
நுகர்ந்து நீ வாழ்ந்திடு.

அக்கறை கொண்டிடு
அதிகாலை நடந்திடு
சர்க்கரை அளவினை
அளவுக்குள் வைத்திடு.

ஆத்திரம் விட்டிடு
அன்பினைப் பெருக்கிடு
மாத்திரை உண்பதை
மறந்திடப் பழகிடு.

சுத்தமாய் இருந்திடு
சுகந்தனைக் கண்டிடு
மொத்தமாய் உண்பதை
முடிவுக்குக் கொண்டிடு.

பசித்திடு புசித்திடு
அளவாய் சாப்பிடு
நசிந்திடும் நோயது
நன்றாய் வாழ்ந்திடு.



## அது என்ன?

1. வாயில்லை புத்திமதிகள் சொல்வான்
காலில்லை கடந்தும் செல்வான்
கையில்லை உளங் காட்டிக் கொள்வான்
உயிரில்லை ஒரு நாளும் சாக மாட்டான். - அது என்ன?

2. மேலே பறக்கும் பருந்தல்ல
கட்டுண்டு இருக்கும் மாடல்ல
அழகான வாலுண்டு குரங்குமல்ல - அது என்ன?

3. ஊர் உண்டு மக்களில்லை
மலையுண்டு மரங்களில்லை
ஆறுண்டு நீரில்லை
அணையுண்டு கல்லில்லை
வழி உண்டு வாகனமில்லை
வண்ணமுண்டு உயிரே இல்லை - அது என்ன?

4. குடிக்கத் தண்ணீர் உண்டு
குளிக்கத் தண்ணீர் இல்லை - அது என்ன?

5. மனிதன் போடாத பந்தலிலே
மலர்ந்து கிடைக்குது பூ - அது என்ன?

### விடைகள்

1. புத்தகம்
2. பட்டம்
3. தேசப்படம்
4. தேங்காய்
5. நட்சத்திரம்



சிறுகதை

# தாய் நிலத்து நட்புகள்...

ஆ.முல்லையத்திவ்யன்



செம்மண் வீதிகள் ஊடாக நடந்து சென்று கொண்டிருக்கிறேன். வாடகைக் காற்று மேனி தழுவி வருடிச் செல்கின்றது. பலா மரங்கள் மரங்களில் நிறைந்து இருக்கின்றன. முள்ளிவளை தண்ணீர் ஊற்று என்றால் நல்ல தண்ணீர் நினைவுக்கு வரும். யாழ் மொழியின் அழகிய கிராமம் முள்ளிய வளை. தூரத்தே வேப்ப மரக்கிளையில் குயில் ஒன்று கூவுகின்றது. பசு மாடுகள் கூட்டம் கூட்டமாக செம்மண் வீதியைக் கடக்கின்றன. மனதிலே மண் வாசம் இயற்கை அழகு மனதைச் சந்தோசப்படுத்தி செல்கின்றது. யாழ்மொழி யின் வீட்டுக்கு வாழைத் தோட்டங் கள் கடந்து தான் போக வேண்டும். மழை பெய்து இருந்ததால நிலம் சகதியாக இருந்தது. எனது காலில் இருந்த இரு செருப்புகளையும் கைகளிலே தூக்கிக் கொண்டு யாழ் மொழியின் வீடு நோக்கி நடக்கத் தொடங்கினேன். செந்நிறப் பட்டுப் பூச்சிகள் செம்மண்ணிலே ஊர்ந்து செல்கின்றன. பார்க்கும் போது பாவமாக இருந்தது. யாருடைய பாதங் களிலும் மிதிபட்டு இறந்த போகப் போகி ன்றன என்று கவலையாக இருந்தது. நான் மிகவும் கவனமாக நிலத்தைப் பார்த்து நடக்கின்றேன்.

எனது பாதங்களில் பட்டுப் பூச்சிகள் மிதிபட்டு விடக்கூடாது என்ற நோக் கோடு நடக்கின்றேன். சில காளான்கள் புற்களுக்கு இடையே முளைத்திருக் கின்றன. செம்மண் ஒழுங்கையின் முடிவிலே தாய் ஆட்டை செவியில் பிடித் துக் கொண்டு நடந்து வந்து கொண் டிருந்தாள் யாழ் மொழி. யாழ்மொழியின் பின்னால் இரண்டு ஆட்டுக்குட்டிகளும் துள்ளி குதித்து வந்து கொண்டிரு ந்தன.

என்ன மான் விழி நீண்ட நாளை க்கு பிறகு வந்திருக்கிறாய் ஓமடி யாரை மறந்தாலும் உன்னை மறப்பேனா மான் விழி? மான்விழியை பார்த்ததும் யாழ் விழிக்கு பழைய ஞாபகங்கள் மன திலே வந்தன. நான் வட்டு வாகல்ல செல்லடி பட்டு விழுந்த போது உன்ர மடியில இருத்தி தண்ணி பருக்கினது இப்பவும் ஞாபகம் இருக்கு. எப்படி மறப்பேன் மான் விழி. ஒரு காலம் நீயும் நானும் ஒன்றாய் நடைபயின்ற காலங்கள் என்றைக்கும் மறக்காது. விளாத்தி மரங்களுக்கு கல் லெறிந்த நாள்கள் ஆனையிறவு உப்பளத்தில் கால் நனைத்த நாள்கள் என்றும் மறாதவை. ஓமடி அந்த நாள்கள் அழகிய நாள்கள், மகிழ்வான நாள்கள் எப்போதும் மனப் புத்தகத்தின் பக்கங்களாக இருந்து கொண்டேயிருக்கும்.

வா அந்த மாமரத்துக்கு கீழே இருப்பம் மான் விழி. இப்ப நீ கொஞ்சம் உடம்பா வந்திட்டா உண்மையாவா? மனதுக்குள் சந்தோசப்பட்டாள் மான்விழி. யாழ்மொழியை பார்க்க கவலையாக இருந்தது. மிகவும் மெலிந்து போயிருந்தாள் மெலிந்து போய் விட் டாய் என சொல்லும் போது அவள் மனம் நோகும் என்பதால் சொல்ல நினைத்ததை மனதோடு நிறுத்திக் கொள்கிறாள் மான்விழி............

மான் விழி எப்படிப் போகுது வாழ்க்கை? பறவாயில்லை யாழ்மொழி. நான் இப்ப தையல் கடைக்கு உடுப்புத் தைக்கப் போறனான். வாற அந்த வரு மானத்தில தான் குடும்பம் ஓடுது யாழ்மொழி. அவரும் கடைசிச் சண்டையோட வெளிநாட்டுக் கெண்டு வெளிக்கிட்டு இடையில நிக்கிறார். அம்மா சீட்டுப் போட்டுச் சேத்த காசையும் அம்மான்ரையும், என் காப்பையும் அடகு வைச்சுத் தான் அவர வெளிநாட்டுக்கு அனுப்பினாங்கள். என்ன செய்யிறது ஒரு காலம் நாங்கள் எப்படி யிருந்தனாங்கள். இப்ப எல்லாம் தலைகீழா மாறிப் போச்சு நாங்கள் சமூகத்தில் தனிய இருந்தாலும் சமூகம் எங்களை தவறான கோணங்களில் பாக்குது.

என்ன செய்ய யாழ்மொழி இது தான் எங்கட தலைவிதி. யாழ்மொழி நீ எப்படி இருக்கிறாய்? இருக்கிறன் மான்விழி. யாழ்விழியைப் பார்க்கும் போதே கவலையாக இருந்தது. காதுகளில் தோடுகள் இல்லை. கழுத்துகளில் நகைகள் இல்லை. புன்னகை தொலைத்து விட்ட பெண்ணாக காட்சியளித்தாள்.

ஏதோ இருக்கிறன் மான்விழி, அவரும் கடைசிச் சண்டையில செத்துப் போக என்ர பொடியனையும் கூட் டிக் கொண்டு மக்களோடு மக்களாக இடம்பெயர்ந்தன் மான்விழி. ஒரு நேர அங்கர் பால்மா வாங்கிறதுக்கே கஸ்ரமாக இருக்கு, சில வேளை எங்கட அப்பா மீன் தெரிச்சிட்டு வாற காசில தான் அரிசியையும் மரக் கறிகளும் வாங்கிட்டு வருவார். சிலவேளை அப்பாக்கு உடம்பு சரியில்லை எண்டால் அண்டைக்கு பட்டினி தான். என்ன செய்யிறது மான்விழி ஒரு காலம் எப்படி இருந்தனாங்கள் நினைக்கவே தலை விறைக்கிறது. மக்கள், தாய் மண் எண்டு புறப்பட்டு உண்மையாகவே மக்களுக்காக வாழ்ந்தோம். என்ன செய்யிறது.

இரு மான்விழி என்ர பொடியன் அழுகிறான் ஒருக்கா பால் குடுத்து விட்டு வாறன். மகன் படுத்திருந்த ஏணை மெல்ல ஆட்டுகிறாள் யுாழ்மொழி. ஏணைக்குள் இருந்த மகனின் கண்களையும் உற்றுப் பார்க்கிற போது அவளுக்கு ஒரு நிம்மதி தனது கணவன் தமிழவன் போலவே மனதிலே சந்தோசப் பட்டுக் கொண்டாள்.

யாழ்மொழி வீட்டு இரண்டு ஆட்டுக்குட்டிகளும் நான் இருக்கின்ற கதிரை மீது ஏறி இறங்கி விளையாடுகின்றது. ஒன்று வெள்ளையும் கறுப்பும். மற்றையது மண்ணிறம். எனக்கு சந்தோசமாக இருந்தது இரண்டு ஆட்டுக் குட்டிகளையும் பார்க்கின்ற போது நானும் யாழ் மொழியும் பழகிய பழைய ஞாபகம் என் மனத்திரையில் வலம் வந்து போகின்றன.

கிணற்றடியில் நின்ற தென்னை மரத்தில் இரண்டு இளநீர் தேங்காயைப் பறித்துக் கொண்டு மாமரத்தடிக்கு விரைந்தாள் யாழ்மொழி. இதை குடியடி மான் விழி. என்னட்டை கடையில வாங்கித்தர ஒண்டுமில்லை இதையா வது குடி மான்விழி.

பறவாயில்லை யாழ்மொழி. நீ எனக்கு ஒண்டும் தராட்டியும் கூட கவலைப்பட மாட்டன். உன்ர நட்பு மட்டுமே போதும் யாழ்மொழி. மகள் பள்ளிக் கூடத்தால வரப்போறாள் கூட்டப் போகணும் யாழ் மொழி. வேற என்னடி...! அது தான் அப்பாவுக்கு வயசு வந்திட்டு அவருக்கு இழுப்பு கூட இருக்கு. அவர் உழைச்சிட்டு வாற காசு அவருக்கே காணாதடி. சில வேளை அப்பா மீன் தெரிஞ்சிட்டு வாற முழு காசையும் என்னட்டையே தந்திடுவார். அவர் தன்ர சுருட்டுக்கு மட்டும் பத்து இருபது ரூபா எடுத்திட்டு மிச்சத்தை என்னட்டை தந்திடுவார். தரக்கே சொல்லுவார் என்ர பேரனுக்கு நல்ல சாப்பாடு செய்து குடு அப்பத் தான் அவன் கெதியா வளருவான். இனியும் அப்பான்ர கையை நம்பியிருக்கக் கூடாது. என்ர பெடியனை தங்கச்சிட்ட குடுத்திட்டு காணி வளவை அடகு வைச்சு மத்திய கிழக்கு நாட்டுக்கு பணிப்பெண்ணாப் போகப் போறன் மான்விழி...

என்ன செய்யிறது யாழ்மொழி கடவுள் ஒருக்காலும் உன்னை கைவிமாட்டார். எப்பவும் உனக்குக் கடவுள் வழிகாட்டிக் கொண்டே இருப்பார். மகள் பள்ளிக்கூடத்தில காத்திருக்கப் போறாள். நான் தான் சைக்கிள்ள போய் ஏத்தோணும் யாழ்மொழி. போயிற்று வாறன் கவனமாக வெளிநாட்டுக்கு போயிற்று வா...

யாழ்மொழியைப் பார்க்கும் போது பாவமாக இருந்தது. என்னால் எதுவும் உதவி செய்யலாம் எண்டால் என்ர நிலையே வங்குரோத் நிலை தான், யாழ்மொழியின் வீட்டு படலையடிக்கு வந்திட்டன். யாழ் மொழியின் மகன் ஏணைக்குள் அழும் சத்தம் கேட்கிறது. ஒரு அங்கர் பால்மாவுக்கு, சேர்லாக் எல்லாம் யாழ்மொழிக்கு எட்டாக் கனியாய்ப் போயிற்று மனதிலே மிக்க துயரத்தோடு வீடு நோக்கி நடக்கின்றேன். வீதியிலே கொக்கிளாய் நோக்கி பேரூந்து பயணிகளுடன் செல்கிறது. ஐஸ்பழம் விற்கும் சைக்கிள் ஒன்று பாடியபடி செல்கிறது. சாலையோர வேப்ப மரத்துக்கு கீழ் இரண்டு சிறுவர்கள் பனாங்கிழங்குகளை விற்பனை செய்து கொண்டிருக்கிறார்கள்.

சொந்த தாய்நாடு விட்டு வெளிநாடா? மனதளவில் கவலைப்பட்டாள் என்ன என்ர மோனை படிப்பிச்சு பெரியாளா ஆக்கோனும் எண்டால் போய்த்தான் ஆகோனும். மனதளவில் நினைத்துக் கொண்டாள் யாழ்மொழி. அன்று வெள்ளிக்கிழமை சவுதி அரேபியா செல்வதற்கு தயாரானாள். யாழ்மொழி வீட்டை விட்டு புறப்படுவதற்கு முன் தன்ரை மகனை ஆசையோடு தூக்கி முத்தமிட்டாள். தான் அடிக்கடி நடக்கும் வீட்டு ஒழுங்கையில் இரண்டு மூன்று முறை திரும்ப திரும்ப நடந்தாள். தான் தண்ணீர் ஊற்றி வளர்த்த வாழை மரங்களை சுற்றி சுற்றி வந்தாள். ஆசையோடு வளர்த்த ஆட்டுக்குட்டிகளுக்கு முள் முருக்கு இலைகள் ஒடித்து சாப்பிட வைத்தாள். முற்றத்தில் பூத்து நின்ற தும்புச் செவ்வரத்தையின் பூக்களை பறித்துக் காளி கோவிலின் முன் படியில் வைத்து விட்டு விமான நிலையம் செல்லும் பேரூந்து நிலையத்துக்குச் செல்லத் தயாரானாள். எவ்வளவு ஆழமாக நேசித்திருந்த மண்ணை விட்டு, பழகிய ஊர் உறவுகளை விட்டு, துயர வலிகளுடன் விமானத்தில் ஏறுகின்றாள்.

சில வருடங்களின் பின்னர் ஒரு மாகாண தமிழ்த்தினப் போட்டி பரிசளிப்பு விழா ஒன்றில் யாழ்மொழியைக் காண்கின்றேன். என்ர மகள் பேச்சுப் போட்டியில் இரண்டாம் இடம் அது தான் கூட்டிட்டு வந்தனான் மான்விழி. என்ர மோன் கவிதைப் போட்டியில முதலாவது அப்படியோ மான் விழியின் மனம் பூரித்தது.

மான்விழி இரண்டு வருடம் சவுதியில கஸ்ரப்பட்டு உழைச்சிட்டுப் போன கிழமை தான் ஊருக்கு வந்தனான். உன்னைக் கண்டதும் சந்தோசம். இனி என்ர உடம்பு கட்டேல போனாலும் நான் நேசித்த இந்த தாய்நிலத்தில தான் ஒரு போதும் வெளிநாடு போறதில்லை. பரிசளிப்பு நிகழ்வு நிறைவுற்று எல்லோரும் நிகழ்வை விட்டு கலைகிறார்கள். யாழ் மொழியும் கையசைத்து விட்டு முச்சக்கர வண்டி ஒன்றில் தன் மகனையும் அவன் பெற்ற பதக்கத்தையும் கையில் பற்றிப்பிடித்தபடி ஏறுகின்றாள்.

நான் எனது மகளோடு வீடு நோக்கி நடக்கின்றேன். ஒரு வித சந்தோசத்துடன் யாழ்மொழியின் மண்பற்றையும் கடின உழைப்பையும் நினைத்தபடி...

# தலையாட்டிப் பொம்மைகள்...

( 03ஆம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்கா யோசித்துக் கொண்டிருந்த போதுதான், போர்க்குற்றப் பழம் நழுவி அமெரிக்காவின் வாயில் விழுந்தது. வலிய வந்த வரத்தை அவ்வளவு எளிதில் அமெரிக்கா விட்டுவிடுமா?

அப்படியே சிக்கெனப் பிடித்துக் கொண்டது போர்க்குற்ற விவகாரத்தை. ஐ.நா, ஜெனீவா என்று இலங்கையை ஒரு ஆட்டு ஆட்டுவிக்க, மஹிந்தவுக்கு கண்ணைக் கட்டத் தொடங்கியது.

இப்படியெல்லாம் போர்க்குற்ற விசாரணையைக் காட்டி அல்லோலகல்லோலப் படுத்த முடியுமா?' என்று மஹிந்த தரப்பு கலங்கிப் போனது. மெல்ல மெல்ல அமெரிக்காவுக்கு பணிந்து போகத் தொடங்கியது. இருப்பினும் சீனாவையும் மஹிந்த கைவிடவில்லை.

ஊசி நுழையும் இடம் கிடைத்துவிட்டால் அமெரிக்கா ஊர்வலமே போய்விடுமே. கிடைத்த சிறு இடைவெளியில் மிகப்பலமாக வலைகளை அது விரித்தது. மஹிந்த ஒவ்வொரு வலையிலும் சிக்கிக் கொண்டே வந்தார். கடைசியில் ஜனவரியோடு ஆட்சியில் இருந்தும் அகற்றப்பட்டார். என்னதான் மக்கள் மாற்றத்தை விரும்பி வாக்களித்ததால் தான் மஹிந்த ஆட்சியதிகாரத்தை இழந்திருந்தாலும், மக்களின் மனதில் மாற்றத்தை உண்டுபண்ணு வதிலும், மைத்திரி தரப்பைப் பலமாக்குவதிலும் அமெரிக்காவின் பங்களிப்பு மிகப் பெரியது.

எதிர்பார்த்தபடி மஹிந்த என்ற சீனச்சார்பு ஆட்சியாளரை அகற்றிவிட்டு, அமெரிக்காவோடு இசையக் கூடிய மைத்திரி-ரணில் கூட்டணியிடம் அதிகாரம் சென்றவுடன், மீண்டும் இலங்கை சீனாவின் கட்டுக்கொடியில் இருந்து விடுபட்டு அமெரிக்கச் செல்லப்பிராணியாக மாறியது. சீனாவின் உதவியுடன் செயற்படுத்தப்பட்ட பல திட்டங்கள் நிறுத்தப்பட்டன.

இப்போது இலங்கை தன் காலடிக்குள் வந்துவிட்டதால் இனியும் போர்க்குற்றப் பூச்சாண்டி காட்ட வேண்டிய அவசியம் அமெரிக்காவுக்கு இல்லை. எனவே போர்க்குற்றங்களில் இருந்து இலங்கையை விடுவித்து, தன்னோடு இணங்கி நடந்தால் என்னென்ன நன்மைகள் கிடைக்கும் என்பதை உணர்த்தவே இப்போது அமெரிக்கா விரும்புகிறது. அதனால் தான் சர்வதேச விசாரணை என்ற கோசத்தை உதறிவிட்டு, உள்ளக விசாரணைக்கு ஆதரவு என்ற புதிய தொனியில் பேச அமெரிக்கா முற்படுகின்றது.

ஆனால் முள்ளிவாய்க்காலில் மக்களும், போராளிகளும் செய்த உயிர்த்தியாகம், புலம்பெயரிகளும், தமிழக உறவுகளும் நடத்திய சாத்வீக போராட்டங்கள் என்பன அர்த்தமிழந்து போய்விடாமல் பாதுகாக்க வேண்டியது கூட்டமைப்பின் கடமை. ஏனெனில் கூட்டமைப்பினர் தான் தமக்காக குரல் கொடுப்பவர்கள் என்ற எண்ணத்தில் தான் இந்தமுறை 16 நாடாளுமன்ற உறுப்பினர்களை மக்கள் வழங்கியிருக்கிறார்கள். ஏறியவுடன் ஏணியை மறப்பது அரசியல்வாதிகளுக்கு புதிதல்ல. இப்போதும் அதுவேதான் நடந்திருக்கிறது.

இதுவரை காலமும் சர்வதேச விசாரணை வேண்டும் என அடம்பிடித்த கூட்டமைப்பு நிஷா பிஸ்வாலின் இலங்கை வருகையோடு உள்ளக விசாரணையே போதும் என்ற நிலைக்கு கீழிறங்கி வந்துவிட்டது. சர்வதேச விசாரணையை உறுதியானதாக்க வாக்கு கேட்டவர்கள், இப்போது சர்வதேச விசாரணையையே கைவிட்டு, உள்ளக விசாரணையே திருப்தி என்று ஒருதலைப்பட்சமாக முடிவெடுத்துள்ளார்கள். மக்களின்விருப்பு என்ன என்பதைக் கூட்டமைப்பினர் இந்த விடயத்தில் மறந்தே விட்டார்களா?

# வட, தென் கொரிய...

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொரியா சொல்கிறது.

இந்த இராணுவ ஒத்திகை கடந்த வாரம் நல்லபடியாக ஆரம்பித்தது தொடக்கம் வடகொரிய, தென் கொரிய பதற்றம் அதிகரிப்பதற்கு முக்கியமான காரணமாகும்.

அடிப்படையில் வட கொரியாவும் தென் கொரியாவும் இன்றும் யுத்தத்தில் ஈடுபடும் நாடுகளாகவே கருத வேண்டி இருக்கிறது.

இரண்டாவது உலகப் போருக்கு பின் அமெரிக்காவும், சோவியத் ஒன்றியமும் கொரிய தீபகற்பத்தை பங்குபோட்டுக் கொண்டதால் பிறந்த இந்த வட கொரியா, தென் கொரியா பிரச்சினை 1950 ஆம் ஆண்டு யுத்தமாக வெடித்தது.

அமெரிக்கா ஆர்வத்தோடு தென் கொரியாவுக்கு உதவ வட கொரியாவுக்கு சீனா மற்றும் சோவியட் ஒன்றியம் உதவ யுத்தமும் சிறப்பாக நடந்தது.

மூன்று ஆண்டுகள் ஓயாமல் யுத்தம் செய்தார்கள், பின்னர் போதுமென்று நினைத்தார்கள் போல், 1953ஆம் ஆண்டு சண்டை நிறுத்தம் ஒன்று ஏற்பட்டது.

இரு நாடுகளின் எல்லையில் இராணுவமயமற்ற வலயம் ஒன்றும் அமைக்கப்பட்டது. என்றாலும் இது குத்துமதிப்பான யுத்த நிறுத்தமாகத்தான் இருந்தது.

முழுமையான யுத்த நிறுத்தம் ஒன்று அமைதி உடன்படிக்கைக்கு பின் தொடரும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் சொல்லப்பட்ட அந்த அமைதி உடன்படிக்கை அரை நூற்றாண்டை கடந்து இன்னும் காணோம்.

அதற்கு பதில் இரு தரப்புக்கும் இடையில் யுத்தம் ஒன்றுக்கான சம்பவங்கள் எக்கச்சக்கமாக இருந்து வருகின்றன. அதற்கு உசுப்பேற்றவும் ஒருசில நாடுகள் எங்கே என்று காத்துக் கிடக்கின்றன. இந்த நிலையில் வட, தென் கொரிய தெருச்சண்டையை இன்னும் பல காலத்திற்கு சலிக்காமல் பார்க்கலாம்.

# நீங்கள் வேற நாடய்யா...

( 11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

புலிகள் அமைப்பில் இருந்தவர்கள் தனியாகப்பிரிக்கப்பட்டனர். தாமாக புலிகள் அமைப்பில் இருந்ததைச் சொல்லப் பயந்து இருந்தவர்கள் மீண்டும் உருவாக்கப்பட்ட புதிய 'தலையாட்டிகள்' மூலம் பிடிக்கப்பட்டனர். கதறக் கதற பல இளைஞர்களும், யுவதிகளும் ஓமந்தையில் தம் குடும்பத்தினரிடமிருந்து பிரித்தெடுக்கப்பட்டு இழுத்துச் செல்லப்பட்டனர். அவர்களில் பலர் இன்னும் மீளவேயில்லை.

-----------------------

எல்லாம் முடிந்து இயல்பு வாழ்வு திரும்பி விட்டதாக அறிவிப்பு வந்துவிட்டது. ஆனால் அப்படியிருந்தும் ஓமந்தையில் எந்தப் பெரிய கொம்பனும் இறங்கித்தான் போகவேண்டியிருந்தது.

ஓமந்தை வரப்போகுது . எல்லாரும் ஐ.சியை கையில எடுத்து வைச்சிருங்கோ.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்து வவுனியாவைக் கடந்து செல்லும் பயணிகள் அனைவரும் தமது பயணத்தின் போது இந்த வார்த்தைகளைக் கேட்டிருக்க முடியும். பஸ்ஸிலிருந்து அவசரமாக இறங்கி, அடையாள அட்டையையும், பொதிகளையும் காட்டும் பழக்கம் தேய்ந்து நாளடைவில் பஸ்ஸுக்குள் வந்து அடையாள அட்டையை மட்டும் பார்க்கும் ஒரு சடங்காக மட்டும் மாறியது. ஒரு வீம்புக்காகவே இந்தச் சடங்கு நடத்தப்பட்டது.

இப்போது அந்தச் சோதனைச் சாவடி முற்றாக அகற்றப்பட்டுவிட்டது. இந்தச் செய்தி அறிந்ததும் இத்தோடு தமிழர் பிரச்சினைக்கே நிரந்தரத் தீர்வு கிடைத்துவிட்டது போல சிலர் குதூகலிக்கிறார்கள். இன்னும் சில அரசியல்வாதிகள் ஓமந்தை சோதனை நிலையம் மூடப்பட்டமைக்கு நானே காரணம்' என்று உரிமைகோருகிறார்கள்.

இப்படி இவர்கள் ஆர்ப்பாட்டம் பண்ணுமளவுக்கு ஓமந்தைச் சாவடி அகற்றப்பட்டமை அவ்வளவு பெரிய விடயமல்ல. ஒரு அடையாளச் சடங்காக , ஆக்கிரமிப்பின் குறியீடாக மட்டுமே அது விளங்கியது. கிட்டத்தட்ட அது இறந்த பிணத்தின் நிலையை அடைந்திருந்தது. அது இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஒன்று என்ற நிலை தோன்றியிருந்தது. பிணத்தை எத்தனை நாள்தான் உயிருள்ளது போல காட்ட முடியும். என்றோ ஒருநாள் எரிக்கத்தானே வேண்டும். அதுதானே அரசுக்கு லாபம். இப்போது ஓமந்தைச் சாவடி அகற்றப்பட்டமை மூலம் அரசு பல விடயங்களைச் சாதித்துள்ளது.

சர்வதேசத்தின் கரிசனை, தமிழ் மக்களின் ஆதரவு, வீண் செலவீனத்தை இல்லாதாக்கியமை இப்படி நிறைய அனுகூலங்கள் கிடைத்துள்ளன.

தாமே நாயை அடித்து விட்டு, பின்னர் அடிக்காமல் விட்டு சந்தோசப்படுத்துபவர்கள் போலவே அரசு நடந்திருக்கிறது.

நாங்கள் தான் நாய்கள் போல அடித்தவன் அடிக்காமல் விட்டவுடன் அவனை நாக்கல் நக்கி நன்றிக்கடன் செலுத்திக் கொண்டிருக்கிறோம்.

# ஆளில்லாக் கண்டத்தில்...

( 07 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அண்மைக்காலங்களாக அதிகரித்து வருகின்றது. 2014ஆம் ஆண்டு பத்துக்கு மேற்பட்ட தடவைகள் அமெரிக்காவின் F-22 போர்விமானங்கள் ரஷ்ய விமானங்களின் அலைவரிசைகளை குழப்பி திருப்பி அனுப்பியுள்ளன. ரஷ்யா தனது போர் விமானங்களை அலாஸ்க்கா எல்லையை ஒட்டிய வான்பரப்பில் பறப்பதன் மூலம் ஆர்டிக் மீதான தனது ஆளுமையை உறுதி செய்ய முயல்வதுடன் கண்காணிப்பு மற்றும் உளவு நடவடிக்கைகளையும் செய்கின்றது.

**சீனாவா கொக்கா**

சீனாவும் ஆர்டிக் கண்டத்தில் அதிக அக்கறை காட்டி வருகின்றது. ஆர்க்டிக் சபையில் 2007ஆம் ஆண்டில் இருந்து ஒரு பார்வையாளராக இருக்கின்றது. 2013ஆம் ஆண்டு ஐஸ்லாந்துடன் சீனா ஒரு வர்த்தக உடன்படிக்கையை செய்து கொண்டு. ஐஸ்லாந்தின் வடபகுதியில் உள்ள ஆர்டிக் பிராந்தியத்தில் பனி உடைக்கும் கப்பல்களைச் சேவையில் ஈடுபடுத்தியது. அத்துடன் நோர்வேயின் Spitsbergen தீவில் ஒரு ஆய்வு மையத்தையும் உருவாக்கியுள்ளது. தரைவழிப் பட்டுப்பாதை கடல்வழிப்பட்டுப்பாதை எனத் தனது கொள்வனவுகளுக்கும் விநியோகங் களுக்குமான பாதையில் அதிக அக்கறை காட்டும் சீனாவுக்கு ஐரோப்பாவுக்கும் வட அமெரிக்காவிற்கும் குறுகிய ஒரு தூர வழி மிகவும் கவர்ச்சிகரமானதாகும். ஆர்டிக்கின் ஊடான பாதையின் நீளம் தற்போது பாவிக்கும் பாதையிலும் பார்க்க 30 வீதம் குறைவான தாகும். ஆர்டிக் பிராந்திய ஆய்வுகளிற்காக சீனா அறுபது மில்லியன் டொலர்கள் செலவு செய்கின்றது. இது அமெரிக்கா செய்யும் செலவீனத்திலும் பார்க்க அதிகமானதாகும்.

இந்தியா, சிங்கப்பூர், தென் கொரியா, இந்தியா ஆகிய நாடுகளும் கூட ஆர்டிக் கண்டத்தில் அகழ்வு செய்வதற்கும் கடற்பயண உரிமத்திலும் அக்கறை காட்டுகின்றன. ஆனால் ரஷ்யா மற்ற நாடுகளிலும் பார்க்க ஆர்டிக் கண்டத்தில் முன்னணியில் இருக்கின்றது. அது அங்கு ஏற்கனவே எரிபொருள் அகழ்வைத் தொடங்கிவிட்டது.



தம்ரோ
சர்வதேச நம்பிக்கையை வென்ற தளபாடங்கள்
Orient Sofa 3+2+1
Feori Bedroom Suite
Rio Wardrobe
ரூபா. 16,900
Regent Bed
ரூபா. 14,575
Hawai 3+1+1
ரூபா. 32,900
TGT 010E Table + TSC 045E Chairs
ரூபா. 27,900
Pearl Dining Suite
KSD 008
ரூபா. 10,975
ரூபா. 22,975
மாதாந்தம் ரூபா. 640
KWU 012
KAV 067
ரூபா. 4,575
இனோவெக்ஸ் இணையற்ற உத்தரவாதத்துடன்
INNOVEX Gas Cooker
Adjustable Pan Holders
ரூபா. 4,290
INNOVEX Induction Cooker
FREE
Stainless Steel Pot with Magnetic Base
ரூபா. 7,490
தம்ரோ உத்தரவாதத்துடன்
INNOVEX Rice Cookers
ரூபா. 2,440
INNOVEX Microwave Oven
ரூபா. 13,850
Preset and Manual Operation • Child Lock
LED Display • Multiple Power Levels
INNOVEX Fans
INNOVEX Sandwich Makers
ரூபா. 2,190
INNOVEX Dry Iron
ரூபா. 1,290
INNOVEX Hand Mixer
ரூபா. 2,490
INNOVEX AM/FM Radio
USB/SD Playback, Remote Control, Rechargeable/Built in Battery
USB/SD Playback, Rechargeable/Built in Battery
ரூபா. 2,290
Pedestal Fan
ரூபா. 4,100
குறைந்த மின் பாவனையுடன் கூடிய
குளிர்சாதனப்பெட்டிகள்
2 inch
சுற்றாடலுக்கு பாதிப்பில்லாத R600a வாயு
மாதாந்த மின் கட்டணம் 100 ரூபாவை விட குறைவு
ரூபா. 59,500
250L
ரூபா. 44,900
180L
MADE IN SRI LANKA
10
அதி உயர் சலவைக்கு
Semi Automatic
6.5kg
Fully Automatic
6kg
INNOVEX
INNOVEX
2 UNITS
4 UNITS
ரூபா. 23,900
ரூபா. 38,900
5
MADE IN SRI LANKA
இனோவெக்ஸ்
LED TV
உடன்
Dialog TV
இலவசம்
ரூபா. 19,900
19" 24" 32" 42" 55"
ஆரம்ப கட்டணமில்லாத 03 வருடங்களுக்கு வட்டியில்லாத இலகு கொடுப்பனவு முறைக்கு
நாடு முழுவதுமுள்ள தம்ரோ காட்சியறைகளிலிருந்து
வாடிக்கையாளர் சேவைக்காக அழையுங்கள்
077 2 857 857
தம்ரோ
www.damro.lk

Knorr

Unilever

9/10 CHANGE ஆகி விட்டார்கள்

நீங்களும் CHANGE ஆகுங்கள்

0722 000 666 க்கு மிஸ் கோல் ஒன்று கொடுத்து சாம்பிள் பக்கெட் ஒன்றினை **இலவசமாகப்** பெற்றுக் கொள்ளுங்கள்




ரூ. 20/- இலிருந்து

கடந்த ஒரு வருடத்தில் நோர் மாசி பவுடர் கலவையைப் பாவித்த, 9 மாகாணங்களிலுள்ள 359 குடும்பத் தலைவிகளுக்கிடையில், LMRB நிறுவனத்தால் 2015 மே மாதம் நடாத்தப்பட்ட ஆய்வுகளின்படி இது உறுதிசெய்யப்பட்டுள்ளது.

முன்னர் இருந்து எங்கள் இல்லத்தரசிகள், அவர்கள் சமைக்கும் உணவுகளில் மாசிக்கருவாட்டை சேர்த்து அதன் சுவையை உணவுடன் சுவை பார்த்தார்கள். அன்றிலிருந்து இன்று வரை இந்த மாசிக்கருவாடு இலங்கையிலுள்ளவர்களில் பிரசித்தி பெற்றுள்ளமை நாம் அறிந்த உண்மை.



மாசிக்கருவாடு பாவனையின் அவசியம் மற்றும் ஆர்வம் எங்கள் இல்லத்தரசிகள் மத்தியில் தற்போது குறைந்துள்ளது. என்னுடன் ஒரு தடவை ஓர் பெண்மணி பேசிய போது "ஐயோ இப்போ மாசிக்கருவாட்டின் விலையைப் பாருங்கள். அதனை வீட்டுக்கு வாங்கி வந்த காலம் கூட ஞாபகமில்லை. அத்துடன் கடைகளில் விற்பனையாகும் மாசிக்கருவாட்டின் மேல் நம்பிக்கையுமில்லை" என்று சொன்னார்.

இதோ அதற்கு ஒரு தீர்வு கிடைத்துள்ளது. நீங்கள் விரும்பிய தரத்தில் நோர் அறிமுகப்படுத்தியுள்ள நோர் மாசி பவுடர் கலவை இப்போதே உங்கள் இல்லங்களில் இருக்கலாம். அதுபோலவே அதிலுள்ள சுவையையும் நீங்கள் விரும்பியிருக்கலாம். எனவே தான் இது மிகச் சிறந்த தரத்திலான உற்பத்தியாகக் கருதப்படுகின்றது.

சுறுசுறுப்பாக இயங்கும் எங்கள் இல்லத்தரசிகளுக்கு மாசிக்கருவாட்டை பணம் கொடுத்து வாங்கி வந்து வீட்டில் கழுவி காய வைத்து இடித்து பொதி செய்து வைத்திருப்பது சிரமமாக இருப்பதனால், நாம் நோர் மாசி பவுடர் கலவையை பாதுகாப்பாகவும் தூய்மையாகவும் தயாரித்துள்ளோம். நீங்கள் எதிர்பார்ப்பது போன்றே புதிய மீன்கள் மற்றும் மிகச் சிறந்த மளிகைப் பொருட்கள் கலந்து தயாரிக்கப்படும் இந்த உற்பத்தி உங்கள் உணவுகளில் அதிக சுவையை சேர்ப்பது போன்றே அதிக பெறுமதியையும் சேர்க்கின்றது. அது மட்டுமா நோர் மாசி பவுடர் கலவை கலந்து தயாரிக்கப்படும் உணவுகளில் ஒவ்வொரு வாயும் அறிந்து கொள்ளும் இந்த சுவை நிச்சயமாய் உங்களையும் ரசிக்கவும் சுவைக்கவும் தூண்டும். அதனால் தான் நோர் மாசி பவுடர் கலவையை சுவை பார்த்த இல்லத்தரசிகள் 10 இல் 9 பேர் இந்த சுவைக்கு மாறியுள்ளார்கள்.

நீங்கள் இன்னும் இந்த சுவையின் மாற்றத்திற்கு மாறாமல் இருந்தீர்களானால்...அதற்கான காலம் இது தான். 0722 000 666 மிஸ் கோல் ஒன்று கொடுத்தீர்களானால் உங்களுக்கு இலவசமாகவே நோர் மாசி பவுடர் கலவை சாம்பள் பெக் ஒன்றினைப் பெற்றுக் கொள்ள முடியும். எனவே நீங்களும் இன்றே இந்த சுவையின் மாற்றத்திற்கு மாறி உங்கள் உணவின் சுவையை மேலும் அதிகரித்துக் கொள்ளுங்கள்.

0112 629 629 அழையுங்கள்

இப்பத்திரிகை கொழும்பு - 6, வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட் மார்க் என்டர் பிறைஸ் ஸ்தாபனத்தால், 2015 செப்டெம்பர் 02ஆம் திகதி வெளியிடப்பட்டது.